வ்யா.—(கணைத்து)-ஸ்வாசார்யன், தனக்கும் ஸ்வஸந்தாநத்துக்கும் பகவத்குணாநுபவம் பண்ணுவிக்கவில்லையென்று வ்யஸநப்பட்டு. (இளங்கற்றெருமை) - பாலஸந்தாநமுடைய ஶிஷ்யர். (கன்றுக்கிரங்கி) - ஸ்வஸந்தாநத்திலே தயைபண்ணி. (நினைத்து) - ஸ்வாசார்யன் தன்னை அதிஷ்டித்துக்கொண்டு ஸ்வஸந்தாநத்துக்குப் பகவத்குணாநுபவம் பண்ணுவித்தருளுகிறனென்று நினைத்து. (முலைவழியே நின்று பால்சோர) - பாவநாப்ரகர்ஷத்தாலே ஸ்வாசார்யாபிமாநமடியாகப் பகவத்குணங்கள் சுரக்க. (நினைத்து இல்லம் சேறாக்கும்) - ஶ்ரோதாக்களுடைய ஶ்ருதயத்தை ஸாம்ஸாரிக தாபமெல்லாம் ஆறும்படி குளிரப்பண்ணி, குணாநுபவத்தாலே களிக்கும்படி பண்ணுகிற. (நல்செல்வன்) - ஸ்லாக்யமான ஸம்பத்தையுடைய பாகவதனுடைய. (தங்காய்) - ஸோதரியானவளே!

(பனித்தலைவீழ) - பனியானது தலைமேலே சொரிய. அதாவது - * மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுடைய ஶ்ரீஸூக்திகளாலே வரும் பகவத்குணாநுபவம். (நின்வாசல் கடை

"அறிந்து" என்றது - கடைக்குறைத்தலாயிருந்ததென்று ஸப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பெண்கள் இத்யாதி.) "பெண்கள் அழைக்கிறமையை யறிந்து" என்று அத்யாஹாரம் திருவுள்ளம்பற்றிக் கீழ் ஒருதாத்பர்யம் அருளிச்செய்து, "ரஹஸ்யத்தையறிந்து" என்று அத்யாஹரித்துத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (பகவத்விஷயம் இத்யாதி.) 'இப்பெண்பிள்ளை' என்றது எழுப்புகிற பெண்பிள்ளையென்றாய், ஆண்டா னென்றபடி. இவள்வாசலிலே யிருந்து அவள் ரஹஸ்யமாக அநுபவிக்க, அத்தை வெளியிட்டா னென்று கருத்து. (கஉ)

பற்றி) - கீழ் ஆசார்யோபதேசமடியாக வரும் பகவத்குணானுபவ ப்ரவாஹ மென்ன, மேலே * மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களால் வரும் குணானுபவப்ரவாஹ மென்ன, நடுவே பாகவதகுணானுபவப்ரவாஹ மென்ன, இப்படி ப்ரவாஹத்ரயத்திலே அகப்பட்டு அலைகிறநாம், உனக்கு ப்ரதிபாதக மான நமஸ்ஸிலே த்வாரவர்த்தியான நகாரமாகிற அவலம்பத்தைப் பற்றி; கீழ்ச்சொன்ன குணானுபவங்களில் போக்த்ருத்வபுத்தி வாராத படி தடுக்கிற நகாரத்தைப் பற்றி யென்றபடி. (சினத்தினால் தென் னிலங்கைக்கோமானைச் செற்ற மனத்துக்கினியானை) - கோபத்தி னாலே, யமவஸ்யதா மூலமான ஸம்ஸாரத்துக்கு நிர்வாஹகமான அஹங்காரத்தை நசிப்பித்து, அதனால மனத்துக்கினியனான சக்ர வர்த்தித்திருமகனை. (பாடவும் நீ வாய்திறவாய் இனித்தா னெழுந்தி ராய்) - எங்களாற்றுமை காணவேணுமென்று இருந்தாயாகில் கண்டபின்பும் உறங்குமித்தனையோ? எழுந்திராய். (சுகதென்ன பேருறக்கம்) - காலமுணர்த்த உணரும் ஸம்ஸாரிகள் நித்ரை போலு மன்றிக்கே, ஆஸ்ரிதர்களார்த்தி யுணர்த்த உணரும் ஈஸ்வர னுடைய உறக்கமும்போ லன்றிக்கே, உபயவிலக்ஷணமான இம் மஹாநித்ரை யேது? ஸம்ஸாரிகள் நித்ரை, தமோபிபூதியாலுண் டானதாகையாலே ஸத்தவோத்தரமான காலத்திலே தீரும்படியா யிருக்கும்; ஈஸ்வரனுடைய நித்ரை, ஜகத்ரக்ஷண சிந்தாரூபமாகை யாலே பரார்த்திகாணத் தீரும்; இவனுடைய நித்ரை, சரமபர்வ நிஷ்டருடைய ஆற்றுமை காணத் தீரும்; ஆகையாலே, அதுக்கு அதி காரிகள் கிடையாமையாலே பேருறக்கமாயிருக்கும். (அனைத்தில்லத் தாருமறிந்து) - நாங்கள் உன்னை யெழுப்புகிறது எல்லாரும் அறிய வேணுமென் றிருந்தாயாகில், அது எல்லாரும் அறிந்தார்கள்: எழுந் திரா யென்கிறார்கள். பகவத்விஷயம் ரஹஸ்ய மென்றிருந்தாயாகில் அது எங்கும் ப்ரஸித்தமாய்த்து, எழுந்திரா யென்கிறார்கள்.

கீழ்ப்பாட்டில் "கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்து" என்று ஸ்வவர்ணோசித தர்மானுஷ்டாநத்தைச்சொல்லி, இப்பாட்டில் சொல் லாமையாலே அதுஜ்ஞாகைங்கர்ய நிஷ்டனுக்கு ஆஜ்ஞா கைங்கர்ய ரூபாநி ஸ்வரூபவிரோதமன் றென்கிறது. இவன் எருமை கறவா மைக்கு இளையபெருமாளே த்ருஷ்டாந்தமாக அருளிச்செய்து, உபா யாந்தர த்யாகத்துக்கு ப்ரமாணமாக "நஷேவயைகாகூணி"

என்கிற ஸ்லோகத்தை உதாஹரித்தது ஐஸ்வர்ய கைவல்ய பகவல் லாபங்களில் அபேக்ஷையில்லாதவர்க்கு தத்ஸாதாரணஸ்டாநத்தில் அபேக்ஷை பிறவாது என்னும் அபிப்ராயத்தாலே. (கஉ)

அ.—பதின்மூன்றும்பாட்டு.—நம் கண் உண்டாகில் தானே வருகிறானென்று கிடக்கிற ளொருத்தியை எழுப்புகிறார்கள்.

மூ.—புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லாவரக்கனைக்
கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய்ப்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்றுப்
புள்ளுஞ்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்
குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே
பள்ளிக்கிடத்தியோபாவாய் நீ நன்னாளால்
கள்ளந்தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய்.

பதவுரை.—(“நம் கண்ணழகுண்டாகில் தானேவருகிறான்” என்றிருப் பாளொருத்தியைப் பார்த்து,)—(முந்துற உணர்ந்துவந்து எழுப்புகிறவர் கள்),—‘புள்ளின்வாய்கீண்டானை-பகாஸுரனுடைய வாயைப்பிளந்தவனும், பொல்லா அரக்கனைக் கிள்ளிக்களைந்தானை-சகலவிதமான பொல்லாங்கையுஞ் செய்த திரிந்த ராவணனுடைய பத்துத்தலைகளையும் கிள்ளி யெறிந்துபோகட் டவனுமான சக்ரவர்த்திதிருமகனுடைய, கீர்த்திமை - (எதிரிகள் மனங் கலங்கும்படியான) வீரசரிதத்தை, பிள்ளைகளெல்லாரும் - எல்லாப் பெண் பிள்ளைகளும், பாடி - (தங்கள்பிதிக்குப் போக்குவீடாகப்) பாடிக்கொண்டு, போய் - (அதுவே வழிக்குத்தாரகமாகச்) சென்று, பாவைக்களம் - (க்ருஷ்ண னும் தாங்களும் கூடுகைக்குக்) குறித்த இடத்தில், புக்கார் - புகுந்தார்கள், (என்றுசொல்ல), - (“அவர்கள் போகைக்குப் போதுவிடிந்ததோ?” என்று அவன்வினவ),—‘வெள்ளி எழுந்து-சுக்கிரன் உச்சிப்பட்டு, வியாழம் உறங் கிற்று-ப்ருஹஸ்பதியும் அஸ்தமித்தது; (அன்றியும்), புள்ளுஞ் சிலம்பினகாண்-பக்ஷிகளுங்கூட (இரைதேடுகைக்காகக்) கூவிச்செல்லாநின்றன; போது அரிகண்ணினாய்-பூவையும்மானையும் ஒத்தகண்ணழகையுடையவளே! பாவாய்-ம்ருதுஸ்வபாவையே! நீ—, நல் நாள் - (க்ருஷ்ணனும் நாமும் ஜலக்ரீடை பண்ணி அவன்மடியில் சாயலாம் காலமான) நல்லநாளில், கள்ளம் தவிர்ந்து-(க்ருஷ்ணசேஷ்டிதங்களே நினைத்துத் தனியே கிடைக்கையாகிற) கபடத்தை

பதின்மூன்றும்பாட்டு. (புள்ளின்வாய் இத்யாதி.) “போதரிக்கண்ணி னாய்” என்றதைக் கடாக்ஷித்து அவதாரிகை (நம்கண் இத்யாதி.) ‘நம் கண்ணுண்டாகில்’ என்றது - கண்ணழகு உண்டாகி லென்றபடி.

விட்டு, கலந்து - எங்களோடுசேர்ந்து, குள்ளக்குளிர - ஒவ்வலிடும்படி குடைந்து ரோடாதே - அழித்து ஸ்நாநஞ்செய்யாமல், பள்ளிக்கிடத்தியோ-(க்ருஷ்ணஸ்பர்சமுடையதொரு) படுக்கையில் கண்வளருகிறாயோ? எழுந்திராய் என்று எழுப்புகிறார்கள்.

வ்யா.—(புள்ளின்வாய் கீண்டானை) - "பள்ளத்தில் மேயும்" இத்யாதி; பகாஸுரனைப் பிளந்தபடி. (பொல்லா அரக்கனை) - தாயையும் தமப்பனையும், உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரித்த கிர்க்ருணன். "சுரிகுழல் கனிவாய்" இத்யாதி; "முன்பொலா விராவணன்" என்னுமித்தனை போக்கி அவன் தண்ணிமைக்கு ஒரு பாசுரமில்லையிறே - அத்தாலேயிறே பிராட்டியும் "க்வ நீ ஹ்ருதயரவ ஹ்ருதா?"(ககக) என்றது; "விலீஷணஸ்ஸ ராக்ஷஸா" (கூ0) என்று - கல்ல அரக்கனும் உண்டென்கை. (கிள்ளிக்களைந்தானை) - திருவிளையாடு சூழலிலே சோப்புக்கவிடங்களைக் கிள்ளிப் போகடுமாபோலே, தோஷாம்ஸத்தை வாங்கிப் போகட்ட படி. (கீர்த்திமை) - "ஸகதோ(ஷ்வவ்யாதவீர்யவஸ்" (கூக) என்று எதிரிகளுக்கும் நெஞ்சுஉளுக்கும்படியான வீரசரிதத்தை. "ஸஞ்ஜீயஸ்வஸுஹ்ருஜ்ஜெ?" (கூக) என்று - உகவாதார்க்கு விடவொண்ணாத வீரம், உகந்த பெண்களுக்குச் சொல்லவேணுமோ?

"புள்ளின்வாய் கீண்டான்" என்றதற்கு-அஸுரனுகையாலே கீண்டானென்னுமத்தை ப்ரமாணமுகேந தர்சிப்பித்துக்கொண்டு சப்தார்த்தம் அருளிச்செய்கிறார் (பள்ளத்தில் இத்யாதி.)' இத்யாதிஎன்றவவதாரம் "என்கிற படியே" என்று சேஷம். "ஸாஅஸுயிதாஹாரயாநிதயாஹரண ஸஹாஹிதா" என்றதைப் பற்ற உடலையு முயிரையும் என்றது. கிருஷ்ணப் பிரித்தமையைப் பொல்லாங்காகி, விசேஷப்ரமாகக் கீழ் ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து ஸாமாந்யமாக ஸகல விதமான பொல்லாகைகளையும் விவக்ஷித்துத் தாத்பர்யாந்தரத்தை ப்ரமாணபூர்வகம் அருளிச்செய்கிறார் (முன்பொலாஇத்யாதி வாக்யத்வயத்தாலே.) "அரக்கன்" என்றால் போராதோ? "பொல்லா" என்னவேணுமோ? என்ன-அருளிச்செய்கிறார் (விலீஷணஸ்ய இத்யாதி.) நெஞ்சு உளுக்கும்படி மர்ஸ்மஸ்தீல்யம் பிறக்கும்படி. ஸௌந்தர்யாதிகளைப் பாடவேண்டியிருக்க வீரசரிதத்தைப்பாடுகிற தென்னென்ன, அருளிச்செய்கிறார் (ஸஞ்ஜீயஸ்ய இத்யாதி.) ப்ரதிகூலர்

"தெொகாஂஸுதெொகா நூமதாநுவஸுஂஸு ஹிகுவாஸிரதாஃ
கூவுஸுணாத வதுழி । வாஸுஸுஂ தழுணவாடிஸியூ
வய-ஃஷு நிஸுூவி தஷெஹயாஸுூஃ" ‡ ராவணன் பெருமான்
வீரத்துக்கு இலக்கானன்; தங்கை அழகிலே கண்கலங்கினள்;
தம்பி ஸீலத்துக்கு இலக்கானன். (பாடிப்போய்) இவர்களுக்குப்
பாதேயம் இருக்கிறபடி; "வாயெயம் வாணுஸீகாகூஷ நாஸவஷ்ஷீ
தஃ நாஸூ திழி"(கூஎ)என்று வழிக்குத்தாரகம் திருமாமலைதான். "தன்
தாள்பாடி" என்னக்கடவதிறே.

(பிள்ளைகள் இத்யாதி.) - நாம் சென்று எழுப்பவேண்டும் பாலி
களும் உனக்குமுன்னே உணர்ந்து புறப்பட்டார்கள். (பாவைக்களம்
புக்கார்) - க்ருஷ்ணனும் தாங்களும் கழகமிடும் ஸங்கேதஸ்தலம்
புக்கார்கள்.

'அவர்கள் போகைக்குப் போதுவிடிந்ததோ?' என்ன, (வெள்ளி
யெழுந்து வியாழமுறங்கிற்று) - வெள்ளி உச்சிப்பட்டது; வியாழம்
அஸ்தமித்தது. உங்களுக்கு நக்ஷத்ரமெல்லாம் வெள்ளியும் வியா
ழமுமாயிறே யிருப்பதென்ன, அதுவேயன்றி—(புள்ளுஞ் சிலம்பின
காண்) - புட்கள் உணர்ந்தமாத்ரமேயன்றிக்கே இரைதேடிச் சில
பிப்போயிற்றின.

(போதரிக்கண்ணினாய்) - புஷ்பம்போலேயும் மான்போலேயு
மிருந்துள்ள கண். அறியென்று - மான். அன்றிக்கே, பூவிலே

வீரத்துக்கு உசக்கக்கூடுமோவென்ன, திருஷ்டார்த்தம் காட்டிக்கொண்டு உப
பாதிக்கிறார் (ராவணன் இத்யாதி.) "பாடி" என்றது, "போய்" என்றதற்கு
ஹேதுவாகத் தோன்றுகையாலே, அத்தை ப்ரமாணபூர்வகம் உபபாதிக்கிறார்
(இவர்களுக்கு இத்யாதி வாக்யத்ரயத்தாலே.) "தானுகந்தவூரெல்லாம் தன்
தான்பாடிப் பூங்கோவலூர்தொழுதும் போது சொன்னே" என்ற பாடுகை
வழிக்கு தாரமென்றதிறே என்றபடி.

கழகம் - ஓலக்கம். ஸங்கேதஸ்தலமாவது - உர்வார்த்தமாக இத்ராணி
யையும், ஸம்ச்லேஷார்த்தமாக ரதியையும் சோற்கைக்குப் பெண்கள் திரளு
மிடம்.

---

‡ இந்த ச்லோகம் சில ஸ்ரீகோஸங்களில் இல்லை.

வண்ம இருந்தாற்போலே யென்றுமாம். "அரி" என்று அன்றியே, போதை ஹரிக்கிற கண் என்றுமாம். பூவோடே சேர்ந்த பாறென்னும் கண் சொன்னவுமாம். (குள்ளக்குளிர) - ஆதித்ய சந்த்ர தீர் கொதிப்பதற்குமுன்னே. (குடைந்துநீராடாதே) "ஸர்வ-ஸ்மாத்பரமாஹதே" (நூகூ) என்னும்படியே க்ருஷ்ண விரஹமாற நீராடப்போகாதே. நமக்குச் சால்லுகிற க்ருஷ்ண விஸ்லேஷம் பிறவாமைக்காகவும் க்ருஷ்ணகுணங்களிலே அவகாஹித்து அநுபவிக்கப்பெறுதே. (போதரிக்கண்ணினாய்) - உன் கண்ணாலே க்ருஷ்ணனைத் தோற்பித்து, அவன் கண்ணாலே குமிழி நீருண்ணப்பாராதே. * நெடுங்கணிளமான் இவள்; * அணைத்தலகு முடைய அரவிந்தலோசனன் அவன். இருவர்கண்ணுக்கும் இலக்கானவர்களிறே இவர்கள். உன்னுடைய ஸௌந்தர்யம் எங்கள் பேற்றுக்கு உடலென் றிருந்தோம்; அங்ஙனன்றிக்கே, இழவுக்கு உடலாகாகின்றதோ? (பள்ளிக்கிடத்தியோ) - க்ருஷ்ணஸ்பர்ஸமுடையதொரு படுக்கையை மோந்துகொடு கிடக்கிறியோ? வீளைந்து கிடக்க உதிர்ந்தெல் பொறுக்குகிறியோ?

(பாவாய்நீ) - தனிக்கிடை கிடக்க வல்லளல்லியே நீ. (நன்னாளால்) - க்ருஷ்ணன்கிடாய் பெண்கள்கிடாய் என்கிற நாட்டாரும் இசைந்து அவனும் நாமுமாய் ஜலக்ரீடை பண்ணி அவன்மடியிலே சாயலாம் காலத்தைப் பெற்றுவைத்து, படுக்கையை மோந்துகொடு கிடப்பதே!. (நன்னாளால்)-மேல்வருகிறநாள் ராவணதிகளைப்போலே பிரிக்கிற நாளிறே. (கள்ளம்தவிர்ந்து கலந்து.)-கள்ளமாவது-தனியே க்ருஷ்ணகுண சேஷ்டிதங்களை நினைத்துக்கிடக்கை. அத்தைத்தவிர்

"அரி" என்ற - சத்ருவாய், அத்தை அருளிச்செய்கிறார் (பூவோடே இத்யாதி.) ஸ்வாபதேசத்துக்குச்சேர அர்த்தம் அருளிச்செய்கிறார் (நமக்கு இத்யாதி.) இவளைக் கண்ணழகையிட்டுச் சொல்லுகிறது ரோடுவைக்கு உபயுக்தமென்னுமது தோற்றுகைக்காக என்ற ப்ரதிகர்மஹ்ருதயபூர்வகம் பாவம் அருளிச்செய்கிறார் (உன்கண்ணாலே இத்யாதி.) கண்வளர்ந்திருக்கும் பெண்ணை "பள்ளிக்கிடத்தியோ" என்றதற்குப் பாவம் அருளிச்செய்கிறார் (க்ருஷ்ணேத்யாதி.)

பாவையாயிருக்குமவளை 'பாவாய்' என்ற மீளவும்ஸம்போதிக்கைக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (தனி இத்யாதி.)

ந்து எங்களோடேகலந்து; எங்களுக்கு உன்னைக்காட்டாதே பறைக் கையாகிற (கஉஉ) * ஆத்மாபஹாரத்தைத் தவிர்ந்து எங்களோடே கல வென்றுமாம். ஸேஷத்வத்தை அபஹரித்தால் ஸேஷியை க்ஷமைகொள்ளலாம்; ஸேஷித்வத்தை அபஹரித்தால் பொறுத்தோ மென்பா ரில்லை; குற்றம் நின்றேபோ மித்தனை.

கலந்து - குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத் தியோ என்று அன்வயம். (கஙு)

ஸ்வாபதேஸ வ்யாக்யானம்.

அ.—பதின்மூன்றும்பாட்டு. (புள் இத்யாதி.) இப்பாட்டில் - நமக்கு ஸ்வரூபஜ்ஞானமுண்டாகில்; அவன்தானே வருகிறானென்று நிச்சயமாய் பிருக்குமவரை எழுப்புகிறார்கள்.

வ்யா.—(புள்ளின்வாய்கீண்டானை) - ஸ்வாச்ரிதருக்கு ஸ்வாது பவவிரோதியான காமாதிதோஷ நிவர்த்தகனும் (பொல்லாவரக் கணைக் இள்ளிக்களைந்தானை)-பொல்லாத அப்ராப்தவிஷயமஹிதமான அஹங்காரத்தை. அஹங்காரத்துக்கு நன்மை தீமைகளாவன - "அஹம், மம" என்றால் ஈச்வரனும் ஈச்வரவிபூதியும் ஸ்வாபிமாக விஷயமாகத் தோன்றுகை - அஹங்காரத்துக்கு நன்மையாவது; தேஹமும் ஆத்மாவும் ஸ்வதந்த்ரமாகத் தோன்றுகை - தீமை யாவது. அநநுகூலமான அஹங்காரத்துக்கு அழல்தட்டாதபடி நிர வஹித்தவனுடைய. (கீர்த்திமை பாடிப்போய்) - கல்யாண குணங்களை ப்ரீதிக்குப் போக்குவீடாகப் பாடி அதுவே தாரகமாகப் போய். (பிள்ளைகளெல்லாரும்) - நாம் சென்று எழுப்பவேண்டிய அகில பாகவதரும். (பாவைக்களம் புக்கார்)-அநந்யார்ஹரான ஸ்ரீவைஷ்ண வர்கள் நிரூபகமான ஸங்கேத ஸ்தலத்தை ப்ரவேஸித்தார்கள். அதாவது - காலக்ஷேபகூடம். (வெள்ளியெழுந்து வியாழமுறங் கிற்று) - பரிசுத்தமான ஜ்ஞானம் அபிவருத்தமாய், அஜ்ஞானம் தலைமடிந்தது. (புள்ளுஞ் சிலம்பினகாண்) மற்றுமுள்ள பாகவ தரும் த்வரித்துக்கொண்டு போந்தார்கள். (போதரிக்கண்ணினாய்) - ஸ்வச்சமாய் ஸ்லாக்யமாய் ஸாரக்ராஹியான ஜ்ஞானத்தையுடைய வரே! (குள்ளக்குளிர) - அவனைப்பிரிந்திருந்த வ்யஸனமெல்லாம்

தன்னை மறைத்தால் வந்த விரோதமென்னென்ன அருளிச்செய்கிறார் (சேஷத்வத்தை இத்யாதி.) (கஙு)

நிஸ்ஸேஷமாய்ப்போம்படி. (குடைந்து) - காலிகூபகூடத்திலே ப்ரவேஸித்து. (நீராடாதே) - பகவதநுபவத்தைப் பண்ணாதே. (பள்ளிக்கிடத்தியோ) - தனித்துக் குணநுபவம் பண்ணுகிறாயோ? (பாவாய் நீ) - தனித்துக் குணநுபவம் பண்ணவல்லையோ? (நன்னாளால்) - ஸத்த்வோத்தரமான காலம் நேர்பட்டபடி என்தான்! (கள்ளம் தவிர்ந்து) - உன்னை எங்களுக்குக் காட்டாமலிருக்கிற களவை விட்டு. (கலந்து) - எங்களோடே ஒருநீராகக் கலந்து, எங்கள் ஸத்தையை யுண்டாக்காய். (கஙு)

அ.—பதினன்காம்பாட்டு. இவையெல்லாவற்றுக்கும் தானே கடவளாய், எல்லாரையும் தானேயெழுப்பக்கடவதாகச் சொல்லி வைத்து, அது செய்யாதே உறங்குகிறவொருத்தியை எழுப்புகிறார்கள்.

மூ.—உங்கள்புழைக்கடைத் தோட்டத்துவாவியுள்
செங்கழுநீர்வாய்நெகிழ்ந் தாம்பல்வாய்கூம்பினகாண்
செங்கற்பொடிக்கூறை வெண்பற்றவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான்போகின்றார்
எங்களைமுன்ன மெழுப்புவான்வாய்பேசும்
நங்காயெழுந்திராய் நாணுதாய்காவுடையாய்
சங்கொடுசக்கர மேந்துந்தடக்கையன்
பங்கயக்கண்ணனைப் பாடேலோரெம்பாவாய்.

பதவுரை.—(நீராடுகைக்கு எல்லாரையும் தானே யெழுப்புவதாகச் சொல்லிவைத்து உறங்குகிறவொருத்தியை நோக்கி),—(தியிலுணர்ந்து வந்தவர்கள்),—உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் - உங்களுடைய புழைக்கடைத் தோட்டத்தி லிருக்கிற தடாகத்திலுள்ள, செங்கழுநீர் - செங்கழுநீர்மலர்கள், வாய்நெகிழ்ந்து - விகஸித்து, ஆம்பல் - கருநெய்தல்மலர்கள், வாய்கூம்பினகாண் - மொட்டித்தனகாண்; (அன்றியும்), செங்கல் பொடிக் கூறை - காஷாயத்தோய்த்த வஸ்த்ரம் தரித்தவர்களும், வெண்பல் - (தாம்பூலம்தரியாமையால்) வெள்ளிய பற்களையுடையவருமான, தவத்தவர் - ஸாத்விகரான ஸந்யாஸிகள், தங்கள் திருக்கோயில் - தங்கள் திருவாராதந க்ருஹங்களில், சங்கிடுவான் - திருவாராதநம்பண்ணுகைக்காக, போகின்றார் - (ஸந்த்யாவந்தநம்பண்ணி) வாராநின்றார்கள்; எங்களை-(* கோழியழைப்பதன்முன்னம் குடைந்து நீராடலிருக்கிற) எங்களை, முன்னம் எழுப்

பதினொராம்பாட்டு. (உங்கள் இத்யாதி.) "நங்காய்" என்றதையும் "எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும்" என்றதையும் கடாக்ஷித்து அவதாரிகை யிடுகிறார் (இவையெல்லாவற்றுக்கும் இத்யாதி.)

புவான் - முன்னமே எழுப்புவதாக, வாய்பேசும்-வாயாற்சொல்லிச் செய்யா தொழிந்த, நங்காய் - பூர்ணையானவளே! நாணுதாய் - (“சொன்னபடி செய்யாதொழிந்தோமே” என்னும்) லஜ்ஜையில்லாதவளே! நாவுடையாய் - பேச்சிலினிமையுடையவளே! சக்கரம் - (வலத்திருக்கையில்) திருவாழியாழ் வானையும், சங்கொடு - (இடத்திருக்கையில்) ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், ஏந்தும் - (பூவேந்தினற்போலே) தரிக்குமவனும், தட கையன் - நீண்டதிருக் கைகளையுடையவனும், பங்கயம் கண்ணனே - தாமரைமலர்போன்ற திருக் கண்களையுடையவனுமான திருமாலே, பாட - (ப்ரீதிக்குப்போக்குவிட்டுப்) பாடுகைக்கு, எழுந்திராய் - எழுந்திருக்கவேண்டும், என்று எழுப்புகிறார்கள்.

வ்யா.—(உங்கள்புழைக்கடை இத்யாதி.)-செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல் மொட்டிக்கும்படி போதுவிடிந்தது; உறங்குவதே இன்னம்! என்ன; ‘நீங்கள் வயலிலே போனிகளோ?’ என்ன; ‘புழைக் கடைத்தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல் மொட்டித்தன’ என்ன; ‘அது பின்னே நீங்கள் வலிய அலர்த்தினிகோள்’ என்ன; (உங்கள் புழைக்கடைத்தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின) - எங்களுக்குப் புகுர வொண்ணாதே, * அஸூர்யம்பஸ்யமான உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் மொட்டித்தன; வெயில் பட்டன்றிக்கே காலபாகத்தாலே யென்கை. இவள் எழுந்திராத இன்னுப்பாலே, “உங்கள்புழைக்கடை” என்று வேறிட்டுச் சொல்லுகிறார்கள்.

‘அலரப்புகுகிற வளவிலே கழிய அலர்ந்ததென்று சொல்லுகிறி கோள், வேறு அடையாளம் உண்டோ?’ என்ன; - (செங்கற் பொ

“புழைக்கடை” என்ற விசேஷித்ததற்கு உத்திப்ரத்யக்திமூகோ பாவம் அருளிச்செய்கிறார் (செங்கழுநீர் இத்யாதி.) “உங்கள்” என்ற பதப்ர யோகத்துக்கு உத்திப்ரத்யக்திமூகோ ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் (அது பின்னே இத்யாதி.) இவர்களுக்குப்புகுரவொண்ணாத புழைக்கடையில் அலருகையையும் மொட்டிக்கையையும் புறம்புள்ளவற்றைக் கண்டு அநு மித்துச்சொல்லுகிறார்களென்ற கருத்து. “தோட்டம்” என்ற விசேஷித் ததற்குப்பலிதார்த்தம் அருளிச்செய்கிறார் (வெயில் இத்யாதி.) இத்தால் - ரிணஸ்பர்சத்தாலொழிய அலருகையும் மொட்டிக்கையும் கூடாதென்று அவன்பண்ணுகிற அர்யதாவிசித்தியைப் பரிஹரித்தார்களென்று சொல்லிற் றாய்த்து. இவளுடைய தோட்டமென்ற தோற்றவேண்டில் “இத்தப்புழைக் கடை” என்னலாயிருக்க, “உங்கள்” என்று - மமகாரமுண்டானவர்களைப் போலே சொல்லக்கூடுமோவென்ன, அருளிச்செய்கிறார் (இவள் இத்யாதி.)

டிக்கூறை இத்யாதி.) - அளற்றுப்பொடியிலே புடைவையைப் புரட்டி, ப்ரஹ்மசர்யம்தோற்றப் பல்லிளக்கித் தண்டபரிஹாரார்த்தமாகத் தபோவேஷத்தையுடையரான ஸ்ரீவத்ஸிஜருங்கூடத் தங்கள் தேவதைகளை ஆராதிக்குங் காலமாய்த்து. ''திருக்கோயில்'' என்றது, அவர்கள் சொல்லும் பாசுரத்தாலே. ''சங்கு'' என்று - ஆராதநோபகரணத்துக்கு உபலக்ஷணம்; குச்சியிட வென்றுமாம். இத்தால்—அஸுரர்களுங்கூட எழுந்திருக்குங் காலமாய்த்து என்கை. ஸந்யாஸிகள் ஸந்த்யாவந்தநம்பண்ணித் தங்களுடைய அகங்களிலே திருவாராதநம்பண்ணுங் காலமாய்த்து என்றுமாம்.

'தமஃப்ரசுரராதுஷ்டாநம் ப்ரமாணமோ? ''ய꣡ஸ்꣡ஜஸ்வபயே வ꣡ரோணஂவெஷ்டாஸு'' (கஉக) அன்றோ?' என்ன; 'தர்மஜ்ஞைபான உன்னுடைய ஸமயமும் ப்ரமாணமன்றிறே' என்கிறார்கள்: (எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும்) - 'எல்லாரையும் நானே யெழுப்புகிறேனென்றுசொன்னது உன்பக்கல் கண்டிலோமீ!' என்கிறார்கள். (வாய்பேசும்) - உக்திமாத்ரமேயாய், அதுஷ்டாநம் இன்றிக்கே யிருக்கை. க்ருஷ்ணனேடே பழகின உனக்குப் பொய்சொல்லுகை வம்போ? (நங்காய்) - பூர்ண

'தண்டபரிஹாரார்த்தமாக' என்றது - ராஜாக்கள் தண்டம்கொள்வர்; அது வாராமைக்கு என்றபடி. ''சங்கிடுவான்'' என்றதுக்கு சங்காலே கீர்விடுகை அர்த்தமாய், தாத்பர்யம் அருளிச்செய்கிறார்('சங்குஎன்ற' இத்யாதி.) இது எம்பார் நிர்வஹிக்கும்படி. ''செங்கல்பொடிக்கூறை'' என்று - காஷாயவஸ்த்ரதாரிகளென்றும், ''வெண்பல்'' என்று - தாம்பூலாதிகளில்லாமையாலே போக்யத்ரவ்யங்களில் விரக்தரென்றும், ''தவத்தவர்'' என்று - ஸாத்விகரென்றும் சப்தார்த்தம் விவக்ஷித்து, திருமலையம்பி அருளிச்செய்த யோஜநாக்ரம அருளிச்செய்கிறார் (ஸந்யாஸிகள் இத்யாதி.)

''நங்காய்'' என்றதே அமைந்திருக்க, ''எங்களைமுன்னமெழுப்புவான் வாய்பேசும்'' என்று விசேஷித்ததுக்கு - அவள் சங்கிக்குமிடத்தில் ஸோபாலம்போத்தரமாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (தமஃப்ரசுரர் இத்யாதி.) தமஃப்ரசுரர்க்கு அதுஷ்டாநத்தில் ஐதம்பர்யமில்லாமையாலே அவர்களெழுந்திருக்குமது விடிந்தமைக்கு அடையாளமாக மெய்க்கொள்ளப்போகாதென்று சங்கைக்குக் கருத்து. திருமலையம்பி நிர்வாஹத்தில், விடிவுக்கு அடையாளமாக ஸந்யாஸிகளெழுந்திருந்தார்களென்னச்செய்தேயும் நிருத்தரையாய்க்கிடக்கையாலே வெறுக்கிறாளென்று ''எங்களை முன்னம்'' இத்யாதிக்கு ஸங்கதி கண்டுகொள்வது. 'வம்போ

யிறே. எனக்கு உங்களை யொழியச் செல்லாதென்று சொல்லும்படி யும், உன் கைரவேக்ஷயமும் எல்லாம் கண்டோமிறே. சொலவும் செயலும் போராதார்க்கு ஒரு பூர்த்தியும் வேணுமோ? (எழுந்திராய்) - எங்கள் குறைதீர்க்க எழுந்திராய்.

(நாணுதாய்) - சொல்லினைத்துச் சொன்னபடி செய்யப்பெற்றிலோ மென்னும் லஜ்ஜையு மின்றிக்கே யிருந்ததீ! நீ யிருந்தவூரில் பூசனியும் காயாதே? என்கை. (நாவுடையாய்) - 'என்னை சேஷபித்துக்கொண்டாகிலும் வருகிறதென்' என்ன; "நாயீஹ்வுஹவி நீதவஸு நாயஜுவெ-ஹ்யாரிணஃ" (கஉச) என்றும், "நஹ்நவ்யாகூரணம் கூஹ்வே" (கஉஞ) என்றும், "ஸஂஸ்ருவெயஂவாகூவே" (ரூரூ) என்றும் உன்பேச்சிலினிமை கேட்க, இவள் எல்லாம் படுத்தினலும் விடவொண்ணுத காவீறுடைமை.

உங்களுக்குச் செய்யவேண்டுவ தென்?' என்ன, (சங்கு இத்யாதி.) - திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் ஏந்தி அந்தஸ்டார்

என்றது - புதுமையோ? என்றபடி. ஸப்தார்த்தகதாமுகேந உபாலம்பம் தோற்ற அருளிச்செய்கிறார் (பூர்ணையிறே என்று.) இது உபாலம்பமானபடியை உபபாதிக்கிறார் (எனக்கு இத்யாதி வாக்யத்வயத்தாலே.) 'உன் கைரவேக்ஷயமும்' என்றது உனக்கு எங்களையொழியச் செல்லும்படியிருக்கையும் என்றபடி. 'கண்டோமிறே' என்ற அநந்தரம், "ஆகையாலே" என்று ஸேஷம். 'பூர்த்தியும் வேணுமோ' என்றது - பூர்த்தியுண்டென்றிருக்க வேணுமோ வென்றபடி. "எழுந்திராய்" என்று - ப்ரார்த்தனை தோன்றியிருக்கையாலே இதுக்குச்சேரக்கூட்டி அர்த்தம் அருளிச்செய்கிறார் (எங்கள் இத்யாதி.) வெறுத்ததெல்லாம் ந்யாயநிஷ்டுரோக்தியாகையாலே இப்படி ப்ரார்த்தநீக்ஷத் தட்டில்லை.

நாணில்லாதவனேயென்று சப்தார்த்தமாய் அத்தை ஹேதுபூர்வகம் அருளிச்செய்கிறார் (சொல்லிஇத்யாதி.) நாணையும், பூசனியுடைய சரசரப்பையும் சுணையென்று வ்யவஹரிக்கையாலே, இவள் சுணையற்றவளாகையாலே இவளிருந்தவூரிலும் சுணையற்றமையை விரித்துவத்கரித்து, அது இல்லாவிட்டால் காய் காயாதென்கிற ப்ரஸித்தியைப்பற்ற ஹார்த்தபாவத்தை அருளிச்செய்கிறார் (நீயிருந்த இத்யாதி.) இத்தால் - இவளுக்கு லஜ்ஜா சூன்யதையை நிரூபகமாகச் சொல்லுகையால் இப்படிச்சொல்லலாமென்று திருவுள்ளம்.

ஸத்தாலே வளர்ந்த திருக்கைகளே யுடையனும், ஆழ்வார்களிலே வந்து அலேயெறிகிற கண்களேயுடையவனே. "இளவாய்ச்சியர் கண்ணினுள்விடவேசெய்து விழிக்கும்பிரான்" என்றுஇவர்களைத்தோற்பித்துக்கொள்ளும்கண்ணிறே. "ஆழியொடும்பொன்னுரைசார்ங்கமுடைய அடிகளே இன்னுரென்றறியேன்" என்று - அநுபவிப்பாரைப் பிச்சேற்றக்கடவ திருவாழியையும், திருமேனிக்குப் பரபாகமான ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையும். முற்படத் தன்னே எழுதிக்கொடுத்துப் பின்னே எழுதிக்கொள்ளுகிற திருக்கண்களேயு முடையவனே. (பாட) - உன்பிரீதிக்குப் போக்குவிட்டு எங்களேயும் உஜ்ஜீவிப்பிக்க. க்ருஷ்ணன்கையில் இப்போது ஆழ்வார்களுண்டோ? என்னில்? - எப்போதும் உண்டு; அது பெண்களுக்குத் தோற்றும்; அல்லாதார்க்குத் தோற்றாது. "உவஸம்ஹர" (சுநி) என்றதும் உகவாதார்க்குக் கூசியிறே. இவர்களுக்குத் தோற்றத்தட்டிலேபே. (கச)

ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்.

அ.—பதினென்காம்பாட்டு. (உங்கள் இத்யாதி.) இப்பாட்டில் பாகவத ஸமுதாயத்துக்கெல்லாம் தாமே கடவராய் இவர்களுக்கெல்லாம் பகவத்ஸம்பந்த கடகர் தாமேயாம்படி ஜ்ஞாந பக்தி வைராக்யங்களாலே பூர்ணரான பாகவதரை எழுப்புகிறார்கள்.

வ்.பா.—(உங்கள் புழைக்கடை இத்யாதி.) ஆகாரத்ய விஸிஷ்டரான உங்களுடைய விஹாரஸ்தாநமான திருமந்த்ரத்தினுடைய மத்யே வர்த்திக்கிற நமஸ்ஸிலே பாரதந்த்ர்யம் ப்ரகாஸமாய் ஸ்வாதந்த்ர்யம் தலேமடிந்ததுகாண்.

(செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்) - ராகப்ரயுக்தமான ஸோஷத்வ ஜ்ஞாநமுடைய மந்தஸ்மிதமுடைபரான ப்ரபந்நாதிகாரிகள் தங்கள் தங்கள் எம்பெருமான் ஸந்நிதியிலே திருவாராதநம் பண்ணுகைக்குப் போந்தார்கள்.

(எங்களே முன்னம் எழுப்புவான் வாய்பேசும் நங்காய் எழுந்திராய்)-எங்களேயெல்லாம்நாங்கள் அபேக்ஷிப்பதற்குமுன்னே ஜ்ஞாநிகளாக்கும்படி ஸ்ரீ ஸக்திகளே அருளிச்செய்யும் பூர்த்தியை யுடையவளே! எழுந்திராய். (நாணாதாய்) - சொல்லும் செயலும் ஒத்திராதார்க்கு நாணமுமின்றிக்கே யொழிவதே!. இப்படி என்னே

கேஷபித்துக்கொண்டாகிலும் என்பக்கல் ஸாபேக்ஷராய் வருவதே தென்ன; 'கா உடையாய்)-வாங்மாதுர்யமுடையவரே! நீர் அஹ்ருதய மாகச் சொல்லிலும் பேச்சினிணிமையைப் பார்த்தால் ஸ்வதஸ்ஸர் வஜ்ஞனை ஈஸ்வரனுக்கும் இது ஸஹ்ருதயம், அவஸ்யம் கர்த்தவ்யம் என்னும்படியா யிருக்கை.

ஜ்ஞாருமுண்டானல் செய்வதென்? என்ன, (சங்கொடு இத்யாதி.)-"வாதுஸ்ஹாயநாஹே" என்கிறபடியே திருவாய்மொழி பாடுகையே ப்ரயோஜநம்; எழுந்திரா யென்கிறார்கள். (கச)

அ.—பதினேந்தாம்பாட்டு. எல்லாருடைய திரட்சியும் காண வேண்டி யிருப்பா ளொருத்தியை எழுப்புகிறார்கள்.

மூ.—எல்லேயிளங்கிளியே யின்னமுறங்குதியோ
சில்லென்றழையேன்மின் நங்கைமீர்போதர்கின்றேன்
வல்லியுன்கட்டுரைகள் பண்டேயுன்வாயறிதும்
வல்லீர்கள்நீங்களே நானேதானாயிடுக
ஒல்லைநீபோதா யுனக்கென்னவேறுடையை
எல்லாரும்போந்தாரோ போந்தார்போந்தெண்ணிக்கொள்
வல்லானைகொன்றானை மாற்றாரைமாற்றழிக்க
வல்லானை மாயனைப்பாடேலோரெம்பாவாய்.

பதவுரை.—(முன்னம் துயிலுணர்ந்து வந்தவர்கள், எல்லாரிருட்டியுங் காணவேண்டியிருப்பாளொருத்தியைப் பார்த்து),—'இளம் கிளியே - இளமைதங்கிய கிளிபோன்ற சொற்களையுடையவளே! எல்லே-(உன்பேச்சினிணிமை இருந்தபடி) என்னே! இன்னம் - நாங்கள்வந்து நின்றபின்பும், உறங்குதியோ - தூங்கக்கடவையோ? (என்று எழுப்ப),—'நங்கைமீர்-பூர்ணைகளானவர்களே! சில்என்று அழையேன்மின்-சிலுசிலுகுவென்று அழையாதே கொள்ளுங்கள், போதர்கின்றேன் - புறப்பட்டுவருகிறேன், (என்ன),—'உன் கட்டுரைகள் - உன் கட்டிச்சொல்லுஞ் சொற்களைப் பார்த்தால், வல்லே - நீ ஸமர்த்தையாயிருக்கிறாய்; உன்வாய் - உன் வாய் வல்லமையை, பண்டே அறிதும் - முன்னமே அறிவோம், (என்றசொல்ல),—நீங்களே வல்லீர்கள்-நீங்களே பேசுகிறமுடையவர்கள்; (அன்றி), நானேதான் ஆயிடுக - நான்தானே ஆகுக' (என்றசொல்லி, 'உன்னுக்குச்செய்யவேண்டுவதென்?'என்றவினவ),—'நீ ஒல்லை போதாய் - நீ சடக்கென (ப்புறப்பட்டு எங்கள்திரளில்)

பதினஞ்சாம்பாட்டு. (எல்லே இத்யாதி.) "எல்லாரும்போந்தாரோ?" என்றதைத் தடஸ்தித்து அவதாரிகை அருளிச்செய்கிறார் (எல்லாருடைய இத்யாதி.)

புகுரவேணும்; உனக்கு வேறு என்ன உடையை - உனக்கு வேறு என்னப்ர யோஜநத்தை யுடைத்தாயிருக்கிறாய்?' (என்று தம்ஆற்றமை தோற்றச் சொல்ல,)—'எல்லாரும் போந்தாரோ - பெண்களெல்லாரும் உண்ர்த்துவந் தார்களோ?' (என்று மறுமாற்றமாக வினவ,)—வல் ஆனை கொன்றானை - பலிஷ்டமான குவலயாபீடத்தைக் கொன்றவனும், மாற்றாரை மாற்று அழிக்க வல்லானை - சத்ருக்களான கம்ஸாதிகளின் ('நம்மை வெல்லவல்லா ரில்லே' என்கிற) மதிப்பை அழிக்கைக்கு ஸமர்த்தனும், மாயனை - பெண் கள் மாயையி லகப்பட்ட ஆஸ்சர்யபூதனுமவனை, பாட - பாடுகைக்காக, போந்தார் - (உன்வாசலில்லந்து) கிடந்தார்கள்; போந்து எண்ணிக்கொள் - புறப்பட்டுவந்து எண்ணிக்கொள்ளாய், என்கிறார்கள்.

வ்யா.—(எல்லே இளங்கிளியே) - "சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன் பங்கயக்கண்ணனைப் பாட" என்று அசலகத்துப் பெண்பிள்ளையை யெழுப்புகிற பாசுரத்தைக் கேட்டு, இவள் அந்தப் பாசுரத்தைத் தன்மிடற்றிலே யிட்டு பாட, எழுப்புகிறவர்கள், அந்தத்வனிவழியே கேட்டுச் சென்று, இவள்பேச்சி லினிமையாலே (எல்லே! இளங்கிளியே) என்கிறார்கள். (இளங்கிளியே) - கிளியை வ்யாவர்த்திக்கிறது. கிளி இவள்பேச்சுக்கு ஒப்பா மித்தனை; பருவத்துக்கு ஒப்பன்றென்கை. (எல்லே) - என்னே! "எல்லே" என்று - பேச்சிலினிமையாலே ஆஸ்சர்யப்படுகிறார்கள். (இன்னம் உறங்குதியோ) - இவர்களழைக்கிறது தன் அதுஸந்தாநத்துக்கு விக்நமாகையாலே பேசாதே கிடக்க, 'இன்ன முறங்குதியோ' என் கிறார்கள். க்ருஷ்ணவிரஹத்தாலே தளர்ந்து உறக்கமின்றிக்கே உன் கடாக்ஷமே பற்றாசாக நாங்கள் நின்றபின்பும் உறங்குமத்தனையோ? க்ருஷ்ணாநுபவத்துக்கு ஏகாந்தமான காலம் வர்த்திக்கிருக்க, உறங் கக்கடவையோ? என்றுமாம்.

உறங்குகிறவனைப் பேச்சிலினிமைகாட்டாதபோது "கிளியே" என்றுஸம் போதிக்கைக்கு ப்ரஸக்தியேதென்ன அருளிச்செய்கிறார் (சங்கொடுஇத்யாதி.) பேச்சிலினிமையைவிட்டு "கிளியே" என்றஸம்போதிக்குமிடத்து "இனம்" என்றதுக்குப்ரயோஜநமில்லாமையாலே, இளமையுடையனாயும் கிளிபோன்ற வனாயுமிருக்குமவனேயென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கிளியைஇத்யாதி.) பேச்சைக்கேட்டு "கிளி" என்றஸம் போதித்தவர்கள், "இன்னமுறங்குதியோ" என்னக்கூடுமோ? என்ன; அதுக் குச்சேரத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (இவர்கள்இத்யாதி.) "இன்னம்" என்றதுக்கு இரண்டுவிதமாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (க்ருஷ்ண இத்யாதி வாக்யத்வயத்தாலே.)

'உத்தேஸ்பம் கைபுகுந்தாலும் உறங்குவா ருண்டோ?' என்ன-(சில்லென்று அழையேன்மின்) - தன் அநுஸந்தானத்துக்கு இவர்க ளழைக்கிறது விக்நமாகையாலே, சிலுகிடாதே கொள்ளுங்கோ ளென்கிறாள். 'இவர்கள் வார்த்தை அஸஹ்யமோ?' என்னில்? - திருவாய்மொழி பாடாகின்றால் செல்வரெழுந்தருளுகையும் அஸ ஹ்யமாமாபோலே. (நங்கைமீர் போதர்கின்றேன்) - 'நாங்களும் எங் கள் சொல்லும் பொறுதபடி உண்பூர்த்தி இருந்தபடியென்?' என்ன; சிலிட்கென்னக்கூசி, (நங்கைமீர் போதர்கின்றேன்) - 'நீங்கள் வாய்திறவாதிருக்க வல்லீகோளாகில் நான் புறப்படுகிறேன்' என்ன;-

(வல்லே உன்கட்டுரைகள் பண்டே உன்வாய் அறிதும்) - "நங் கைமீர்" என்று - உறவற்ற சொல்லாலே வெட்டிமை பெல்லாம் சொல்லவல்லே என்னுமிடம் நாங்கள் இன்றாக அறிகிறாமோ? சொல்லிற்றைச் சொல்லி, எங்கள் தலையிலே குற்றமாம்படி வார்த்

இவர்களெல்லாரும் தம்வாசலிலே வந்திருக்கையும் க்ருஷ்ணநுபவத்து க்கு ஏகாந்தம் விதித்திருக்கையும் இவளுக்கு உத்தேச்ய மென்று திருவுள்ளம் பற்றி, யோஜநாத்வயத்துக்கும் சேர உத்தாரத்தா நுவாதரூபேண மேலுக்கு ஸங்கதியைக் காட்டுகிறார் (உத்தேஸ்பம்இத்யாதி.) "இன்னமுறங்குதியோ" என்றதுக்கு - நங்கைமீர்போதர்கின்றேன்', என்று இவ்வளவே சொல்ல வேண்டியிருக்க, மத்யே அநாதரம்தோற்ற "சில்லென்றழையேன்மின்" என் னக்கூடுமோ வென்ன அருளிச்செய்கிறார் (தன் அநுஸந்தாநத்துக்கு இத் யாதி.) திருவாய்மொழிபாடுதை - திருப்புன்னைக்கீழே. கீழே "சில்லென்ற ழையேன்மின்" என்று சொல்லினதை, "நங்கைமீர்" என்று பூர்த்தியை யிட்டு இவன் ஸம்போதிக்கைக்கு ப்ரஸக்தி அருளிச்செய்கிறார் (நாங்களும் இத்யாதி.) "போதர்கின்றேன்" என்ற அநந்தரம் "என்கிறாள்" என்று சேஷம்.நீங்கள் பூர்ணைகளன்றோ?வாய்திறவாதிருந்தால் நானும் எழுந்திருந்து வருகிறேனென்ற அநுபவசாரூபமாகக் கீழ்க்குத் தாத்பர்யத்தைச் சொல் லாகின்றகொண்டு மேலுக்கு அவதாரிகையிடுகிறார் (நீங்கள் இத்யாதி.)

ஸகலைக்குறித்து "நங்கைமீர்" என்று பூர்ணதையையிட்டுச்சொல்லுகை உறவற்றசொல்லாகத்திருவுள்ளம்பற்றி, "நங்கைமீர்" இத்யாதி "வாயறி தும்" என்ற அளவுக்கும் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (நங்கைமீர்இத் யாதி.) வெட்டிமை-நிஷ்ட்ரேம். உன்னுடைய கட்டுரைகளோ-சொற்களைப் பார்த் தால், நீ-, வல்லே - ஸமர்த்தையாகையாலே, உன்வாய் - உன்னுடைய வார்த் தையை, பண்டே அறிதுமென்ற சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி "சில்லென் றழையேன்மின்" இத்யாதியை உட்கொண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (சொல்லிற்றை இத்யாதி.) 'எனதின்தலையிலே குற்றமாம்படி' என்றதுக்கு -

தை சொல்லவல்லீ யென்னுமிடம் பண்டே யறியோமோ? என்று மாம்.

(வல்லீர்கள் நீங்களே) - 'இன்னம் உறங்குதியோ என்றும், வல்லியுன்கட்டுரைகள் என்றும் வெட்டிமை உங்களதன்றே?' என்ன; 'உன்வாசலிலேவந்து எழுப்ப, "சில்லென்றழைபேன்மின்" என்றது - உன்னதன்றே வெட்டிமை?' என்ன; 'அது என்குற்ற மன்று, அதுவும் உங்கள் குற்றமே: - நம்முடைய வார்த்தை கேட்க உகக்குமிவள், நம்வார்த்தை அஸஹ்யமாம்படியிறே க்ருஷ்ணகுணங் களிலே அவகாஹித்தது என்று உகக்கவேண்டி யிருக்க, அதிலே தோஷத்தை யேறிட்ட உங்களதன்றே குற்றம்? அதுகிடக்க; "வாஸுதேவனீவஹாவெ?" (கஉசு) என்றன்றே ஸ்வரூபமிருப்பது; ஆகையாலே, (நானேதான் ஆயிடுக)' - இல்லாத குற்றத்தையும் சிலர் "உண்டு" என்றால், இல்லைசெய்பாதே இசைகையிறே வைஷ் ணவலக்ஷணம். "உதாவதேவா நிதிதாவதீஸு" (கஉஎ) என்று- பிறர் குற்றத்தையும் தன்னுடைய பாபபலம் என்றனிறே ஸ்ரீபரதாழ் வான்.

'உங்களுக்குச் செய்யவேண்டுவது என்?' என்ன; - (ஒல்லை நீ போதாய்) - எங்களுக்கு ஒருக்ஷணமும் உண்ணியொழியச் செல்லா மையாலே எங்கள் தெருளிலே சடக்கெனப் புகுந்துகொடு நில்லாய்.

நாங்கள் சிலிட்சென்றதாய் நீ கூசி அநுநயம்பண்ணி நல்லவார்த்தைசொல்ல ஸமர்த்தை என்று கருத்து.

ஏவகாரம்தவிர "வல்லீர்கள் நீங்கள்" என்றதற்குப் பாவம் அருளிச் செய்கிறார் (இன்னம் இத்யாதி.) ஏவகாரத்துக்கு-நான் வல்லியன்று என்று அர்த்தவிசேஷமாகையாலே, இதற்கு ப்ரஸக்தியை அருளிச்செய்பாகின்றகொ ண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (உன்வாசலிலே இத்யாதி வாக்யத்வயத் தாலே.) "உங்கள்குற்றமே" என்றதை உபபாதிக்கிறார் (நம்முடைய இத் யாதி.) மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (அது கிடக்க இத்யாதி.) ஸ்வரூபத்தையுணர்ந்தால் இல்லாத குற்றத்தையும் அங்கீகரிக்கவேண்டுவா னெனனென்ன; அருளிச்செய்கிறார் (இல்லாதஇத்யாதி.) "நானேதானாயிடுக" என்ற பிரபக்தல் குற்றத்தை இல்லைசெய்து, தன்மேலே யாக்கிக்கொண்ட பேர் உண்டோ? என்ன; அருளிச்செய்கிறார் (மத்பாபம் இத்யாதி.)

"ஒல்லை" என்றதின்அர்த்தம்'சடக்கென'என்றது. இவர்களைப்போலே அவளுக்கும் செல்லாமையுண்டானாலிறே சடக்கென வரக்கூடுகென்ன; அரு

"சாதுகோட்டியுட் கொள்ளப்படுவாரே" என்று - அவளுக்கும் இத் திரளேயிறே ப்ராப்யம். (உனக்கென்ன வேறுடையை) - பஞ்ச லக்ஷங்குடியில்பெண்களுக்குஉள்ளதொழிய, தனியே ஸ்வயம்பாகம் பண்ணுவாரைப்பேலே உனக்கு வேறேசில உண்டோ? வைஷ்ணவ விஷயத்தைப் பஹிஷ்கரித்துப் பற்றும் பகவத்விஷயத்தோடு தேவ தாந்தரத்தோடு வாசியில்லை; "நீ ஒருவர்க்கும் விரோதியல்லை; நீ புக்குத் திருவடிதொழு" என்ற ஆழ்வான்வார்த்தையை நினைப்பது.

(எல்லாரும் போந்தாரோ) - எனக்கு உங்களை யொழிய ஸஹ முண்டோ? உணர அறியாத சிறு பெண்களும் உணர்ந்தால் புறப் பட விருந்தேன்; எல்லாரும் போந்தாரோ? என்ன; (போந் தார்) - க்ருஷ்ண விரஹத்தாலே தவண்ட பெண்களடைய உன் னைக் காண்கைக்கு உன்வாசலிலே வந்து கிடந்தார்க ளென்ன; ஆகில், உள்ளே புகுரவிடுங்கோ ளென்ன; - (போந் தெண்ணிக் கொள்) - புறப்பட்டு மெய்க்காட்டுக் கொள். மெய்க்காட்டுக்கொள் ளுகைக்கு ப்ரயோஜநம் தனித்தனியே பார்க்கையும், அநுபவிக்கை யும்.

நாமெல்லாரும் கூடினால் செய்வதென்? என்ன,—(வல்லானை கொன்றானை)-குவலயாபீடத்தைக் கொன்று நம் ஜீவநமான தன்னை நோக்கித் தந்தவனை. (மாற்றாரை மாற்றழிக்க வல்லானை)-எதிரிட்ட

ளிச்செய்கிறார் (சாதுஇத்யாதி.) இவளுக்குத் தனியே க்ருஷ்ணநுபவ மில்லை யோவென்ன; அருளிச்செய்கிறார்(வைஷ்ணவஇத்யாதி.) ஆழ்வான்வார்த்தை யாவது - எம்பெருமானார் ஸம்பந்திகளே "கோயிலுக்குள்ளே புகுரவொண் ணுது" என்ன; "எம்பெருமானார் ஸம்பந்தமே போரும்" என்று திரும்பிச் சொன்ன வார்த்தை.

"உனக்கு என்ன வேறு உடையை" என்றதால் - தன்னிடத்தில் ஸ்வாதந்தர்யத்தை எறிடுகையாலே அஞ்ஞைமைதோன்றப் பாவம் அரு ளிச் செய்கிறார் (எனக்கு உங்களை இத்யாதி.) மெய்க்காட்டுக்கொள் - எண் ணிக்கை பிடித்துக்கொள் என்றபடி. 'அநுபவிக்கையும்' என்றது - ஸம் ஸ்லேஷித்து அநுபவிக்கையும் என்றபடி.

வலியதாய் - பலிஷ்டமாயிருக்கிற, ஆனை யென்றாய், அத்தைக் கொல் லுகை குணமாம்படி தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (குவலய இத்யாதி.) "மாற்று" என்று - பொன்னினுடைய வர்ணைக்கர்ஷமாய், இங்கே பலாதி ஸயத்தைச் சொல்லுகையாலே, மாற்றாரைப் பலம்போக்கும் மிடுக்கனை யென்ற சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றிப் பலிதார்த்தத்தை அருளிச்செய் கிறார் (எதிரிட்டஇத்யாதி.)"கீழைக் கடாகத்தைப் பாவம் அருளிச்செய்கிறார்

கம்ஸாதிகளை அநாயாஸேந நஶிப்பித்து, "நவஶயாஜஶிதா ஹஸ்தி" (கஉஅ) என்று அஞ்சின பெண்களை வாழ்வித்தவனை. (மாயனை) - தன்கையில் அவர்கள் படுமத்தைத்தான் பெண்கள் கையிலே படுமவனை. (வல்லானை கொன்றானை) - அங்கே குவலயா பீடத்தைக் கொன்றுற் போலே நம்முடைய ஸ்த்ரீத்வாபிமாநத் தைப் போக்கினவனை. (மாற்றுரை மாற்றழிக்க வல்லானை) - சா ணூர முஷ்டிகாதிகளை நிரஸித்தாற்போலே, நம்மைத் தன்னெடு சேர வொட்டாத இடையருடைய ஸங்கல்பத்தைப் போக்கினவனை. (மாயனை) - எதிரிகளைத் தான் தோற்பிக்குமா போலே நங்கையிலே தோற்ற ஆஸ்சர்யபூதனை. (பாட) - நமக்கு அவன் தோற்குந் தோல் விக்குத் தோற்றுப்பாட. (கடு)

ஸ்வாபதேஶ வ்யாக்யாநம்.

அ.—பதினஞ்சாம்பாட்டு. (எல்லே யித்யாதி.) இப்பாட்டில் பாகவத கோஷ்டியைக் காண ஆசைப்பட்டிருப்பா ரொருவரை எழுப்புகிறார்கள்.

வ்யா.—(எல்லே) - அசலகத்துப் பிள்ளையை எழுப்புகிறவர் கள், "சங்கொடு சக்கரம்" இத்யாதியைப் பாட, அப்பாசுரத்தைத் தன் மிடற்றிலே வைத்துப் பாடுகையாலே, அது தானும் இவர்க ளுக்கு அத்யந்தம் ஆகர்ஷகமா யிருக்கையாலே, அவரைக் கொண் டாடுவதற்கு முன்பு "எல்லே!" என்று - ஆஸ்சர்யப் படுகிறார்கள். (இளங்கிளியே)-கிளி பேச்சுக்கு ஒப்பாமத்தனையல்லது பருவத்துக்கு ஒப்பாமோ? இவ்விடத்தில், பருவமென்பது - அபிநிவேஶத்தை; அவற்றுக்கு அபிநிவேஶ பூர்வகமாக வார்த்தை சொல்லவேணு மென்கிற நிர்பந்தமில்லையிறே. (இன்னம் உறங்குதியோ) - நாங்க ளனைவரும் வந்த பின்பும் உறங்கக் கடவையோ?

(தன்கையில் இத்யாதி.) அதாவது - தன் கையில் எதிரிகள் படுவதை யெல்லாம் பெண்கள் கையிலே தான் பட்டு, பெண்களுக்குத் தான் தோற்ற தோல்வியாலே அவர்களை வென்றிருக்குமவன் என்கை. "வல்லானை" இத் யாதிக்கெல்லாம் தாத்பர்யாந்தரங்களை அருளிச் செய்கிறார் (அங்கே இத் யாதி.) "வல்லானை" இத்யாதிக்கெல்லாம் சொன்ன இரண்டு பாவத்தை யும் திருவுள்ளம்பற்றி, "பாட" என்றதற்குத் தாத்பர்யம் அருளிச் செய்கி றார் (நமக்கு இத்யாதி.) "பாடப்போந்தார்" என்று அந்வயம் கண்டு கொள் வது.

சில்லென்று அழையன்மின்) - இப்படி அவர்களழைக்கை ஸ்வாபவிரோதி பாகையாலே, 'சில்லென்றழையேன்மின்' என்கிறார். (நங்கைமீர் போதருகின்றேன்) - 'கால்கரும் கம்பேச்சும் போராதபடி உன்னூர்க்கி லென்?' என்ன, 'கம்பாகாரத்தை மிடற்றிலே வைத்துப் பாடுகிற இவ்வதிபவத்துக்கு விரோதம் பண்ணலாகாதே யென்று எழுப்பாதே யிருக்க வேண்டியிருக்க, அது பொறாதே யெழுப்புகிற நீங்களன்றோ பூர்ணைகள்? நீங்கள் வேறுமனே யிருந்தி கோளாகில் நான் புறப்பட்டு வருகிறேன்' என்ன;

(வல்லீ உன்கட்டுரைகள்)-நீர் கட்டுவார்த்தை சொல்ல ஸமர்த்தர். (பண்டேஉன் வாயறிதும்) - இவ்வர்த்தம் முன்பே உன் பாசுரங்களாலே அறிவோம். (வல்லீர்கள் நீங்களே) - உங்கள் பாசுரத்தை அநுபவிக்கிற என்னுடைய அநுபவத்துக்கு விரோதத்தைப் பண்ணி, அதுக்குமேலே என்மேலே பழியாம்படி வார்த்தை சொல்ல வல்ல நீங்களன்றோ ஸமர்த்தர்கள்?' என்ன; (நானேதான் ஆயிடுக) - பாகவத ஸேஷத்வம் ஸ்வரூபமானால் அவர்களிடும் பழியும் தம்மேல் வாங்கிக் கொள்ளுகை ஸ்வரூபமன்றோ; ஆகையாலே, நானே அபராதியாயிடுக.

(ஒல்லை நீ போதாய்) - இப்படி பழியைத் தம்மேலே ஏறிட்டுக் கொண்ட இவரை, சடக்கென இக்கோஷ்டியிலே ப்ரவேஶியாய் என்கிறார்கள். (உனக்கென்ன வேறுடைமை) - உனக்கென்று ப்ருதக்கான பகவத்குணாதிபவம் என்? நாம் புறப்படுகைக்கு எல்லாரும் போந்தாரோ? என்ன; (போந்தார் போந்தெண்ணிக்கொள்)-எல்லாரும் போந்தார்கள்; நீயும் இக்கோஷ்டியிலே ப்ரவேஶித்து மெய்க் காட்டிக்கொள்.

புறப்பட்டுச் செய்யவேண்டியது என்? என்ன,—(வல்லாரை இத்யாதி.)-ஸ்வயத்நத்தால் கடக்க அரிதாய்ப்ராயஶ்சித்தஸஹாஶ்யமுமின்றிக்கே யிருக்கிற அஹங்கார நிவர்த்தகனும் மற்றுமுள்ள காமக்ரோதாதிகளுக்கும் நிவாரகனும் ஆஶ்ரிதபரதந்த்ரனேப்பாட, ஒல்லை நீபோதாய் இத்யந்வயः (கடி)

பதினாறும்பாட்டு. (காயதன் இத்யாதி.) முதலஞ்சுபாட்டாலே - பரவ தாதபோகாரணங்களை அருளிச்செய்து, எழுப்புகிற பத்துப்பாட்டிலும் வைத்துக்கொண்டு, முதல்பாட்டில் - பரவதேச ஹோகாரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் அசேஷ ப்ரயோஜராய் இவ்விஷயத்தில் தேஶிகரன்றிக்கே பிறப்

அ.—பதினைந்தாம்பாட்டு. கீழில் பத்துப்பாட்டாலும - முற்பட வுணர்ந்தவர்கள் உறங்குகிறவர்களை யெழுப்ப, எல்லாரும் கூடி வந்து ஸ்ரீரங்கநாதகோபுரத்திருமாளிகையிலே சென்று கோயில்காப்பானை யும் திருவாசல்காப்பானையும் எழுப்புகிறார்கள். "செய்யாதன செய்யோம்" என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை அனுஷ்டாநபர்யந்த

பாரை அவர்கள்பக்கல் பரிவாலே தேறிக் காக்குகை - தங்களுக்கு க்ருத்ய மென்றிருக்கை - ஸ்ரீ வைஷ்ணவத்வலக்ஷணமென்று அவர்கள் ஸ்வபாவத் தைச் சொல்லுகிறது; இரண்டாம்பாட்டில் - பகவத்விஷயத்தில் ஜ்ஞாத மான அர்த்தம் ஒருவனுக்கு விஸ்மருதமானால், தங்கள் பரிவாலே, "வொய்யத்தெவரஹரடி" என்கிறபடியே அறிவிக்கை - ஸ்ரீவைஷ்ண வர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது; மூன்றாம்பாட்டில் - பகவதநுபவத்தில் ப்ரத் யாஸக்தராய் இருப்பாரைக் குறித்து ஸாபேக்ஷராயிருக்கையும், அவர்களை மூன் னிட்டுஈச்வரனைப்பற்றுகையும்-ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது; காலாம்பாட்டில் - "தத்தவயுவஹூஸாஹவெசு" என்றபூர்வார்த்தநிஷ்ட் டராயிருப்பாரை பகவத் ப்ரேமாதிசயத்தாலே தத்பரோகராயிருப்பார் ஹோகார்த்தமாக ப்ரேரிக்கை - ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கி றது; அஞ்சாம்பாட்டில் - ஆசார்யநிக்ஷாதெவஜெதிழி என்றும், "சுஹம்வஹஜெவியது" என்றும் அவன் பகருபதித்திருப்பார்கிறத்து நித்ய ஸாபேக்ஷரா யிருக்கை-ஸ்வரூபம் என்கிறது; ஆறும்பாட்டில்-பகவத்ஸம்பந்தம் விச்சேதியாதேபோந்த ஆசார்யஸம்தாந ப்ரஸூதர் நமக்குப் பூஜ்யர்; அவர்க ளடியாக பகவத்ஸமாஸ்ரயணம் பண்ணுகையும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸ்வ ரூபம் என்கிறது; ஏழாம்பாட்டில்-பகவத் விஸ்லேஷத்தம் அஸஹ்யமாம்படி அவ காஹித்தவர்கள் நமக்கு உத்தேஸ்யராமளவன்றிக்கே, தத்ஸம்பந்தி ஸம்பந்தி களும் உத்தேஸ்யரென்றிருக்கை - ஸ்வரூபம் என்கிறது; எட்டாம்பாட்டில் - பகவதநுபவபரிகரமான ஜ்ஞாந வைராக்ய பக்திகளால் பூர்ணராயிருப்பார் கிறத்து தத்தர்த்தமாக ஸ்ரீ வைஷ்ணவர் ஸாபேக்ஷரா யிருக்கை - ஸ்வரூபம் என்கிறது; ஒன்பதாம்பாட்டில் - பகவத் விஷயத்தில் மூட்டுகையாலே அதி கரித்த நிர்வாஹகர் முன்னே பகவதநுபவம் பண்ணுகை - ஸ்வரூபம் என்கி றது; பத்தாம்பாட்டில் - ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸமூஹம் அபிமதமாயிருக்கு மவர்களைக் கண்டால் அந்த ஸமூஹமாக, அவர்களையுகக்கை ஸ்வரூபம் என்கி றது என்ற ஆறுயிரப்படியிலே அருளிச்செய்த ஸ்வாபதேஸத்தைக் கண்டு கொள்வது. ஆக, கீழ்ப்பத்துப்பாட்டுக்கும் இப்பாட்டுக்கும் பேதிகாஸங்க ளை அருளிச் செய்கிறார் (கீழ்இத்யாதி.) கோயில்காப்பானையிருக்கும் திரு

மாக்கவேணுமே. கதியரை முன்னிட்டுப் பற்றுத அன்று முறை தப்பின சூர்ப்பணகை பட்டது படுமத்தனே. "வல்லபரிசு வருவிப் பரே லதுகாண்டும்" என்னும் பெரியாழ்வார் திருமகளிறே இவள்.

மூ.—நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே! கொடித்தோன்றுந்தோரண
வாசல்காப்பானே! மணிக்கதவந் தாள்திறவாய்
ஆயர்சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலேவாய்நேர்ந்தான்
தூயோமாய்வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதேயம்மா! நீ
நேசநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய்.

பதவுரை.—(உணர்ந்து திரண்ட எல்லாரும் சென்று வாயில் காப்பா னேநோக்கி),—'நாயகனாய்நின்ற - எங்களுக்கு ஸ்வாமியாயிருக்கிற, நந்தகோ பனுடைய—ஸ்ரீநந்தகோபருடைய, கோயில்காப்பானே - திருமாளிகையைக் காக்குமவனே! (உன்னேபுகுரவிடவேணும்' என்ன; அவன் கண்ணுலே "போங் கோள்" என்று சைகைகாட்டிநிற்க; இரண்டாம்வாசலளவும்சென்று, அங்கு உள்ள வாயில்காப்பானேப் பார்த்து),—'கொடித்தோன்றும் - துகிற்கொடி கள் விளங்காநிற்பதாய், தோரணம் - தோரணங்கள் கட்டியிருப்பதான, வாசல் - திருவாசலே, காப்பானே - காக்குமவனே! மணிக் கதவம் தாள் - அழகிய கதவின் தாழ்ப்பாளை, திறவாய் - திறத்து எங்களே உள்ளேபுகுர விடவேணும்' (என்ன, 'நீங்கள் வஞ்சகைகளாயிருப்பீர்கள், உங்களேப்புகுர விடப் பயமாயிராகின்றது' என்ன),—ஆயர் சிறுமியரோமுக்கு - இடையர் வயிற்றிற்பிறந்த சிறுபெண்களான எங்களுக்கு, மாயன் - ஆச்சர்யசேஷ்டி தங்களேயுடையவனும், மணிவண்ணன்-நீலமணிபோன்ற திருநிறத்தையுடை யவனுமான ஸர்வேசுவரன், அறைபறை-சப்தியாநின்றுள்ள பறையை, நென் னலே - நேற்றே, வாய்நேர்ந்தான்-(தருகிறேனென்று) திருவாய்மலர்ந்தருளி னன் (என்றுசொல்ல,—'ஆகிலும், நீகைள் ப்ரயோஜநாந்தரபரைகளன்றோ' என்று அவன் வினவ),—துயில் எழ-தூக்கத்தைவிட்டு அவனெழுந்திருக்கும்

வாசல்காப்பானே எழுப்புகிறார்களென்றும் ஓர் அவதாரிகை கண்டுகொள்வது. மூன்பு பெண்களிடங்களிலே போய் அவரவரைப் பேரைச்சொல்லி எழுப்பி னற்போலே, இங்கும் நோன்புக்கு வர்துஎழுப்புங்கோளென்று சொல்லிப் போந்த கருஷ்ணன் பேரைச்சொல்லிக் கூப்பிட வேண்டியிருக்க, இவர்களே யழைக்கிற தென்? என்ன; அருளிச்செய்கிறார் (செய்யாதன இத்யாதி·) "பெரியாழ்வார் திருமகளிறே இவள் என்றதற்கு" - ஆண்டாளே இத்தனே கோபிமாராகப் பாவித்திருக்கையாலே இங்ஙன் சொல்லலாமென்று கருத்து

படி, பாடுவான்-திருப்பள்ளியெழுச்சி பாடுகைக்கு, தூயோம் ஆய் வந்தோம்-அகச்யப்ரயோஜகராம் நாங்கள் வந்திருக்கிறோம்; அம்மா - ஸ்வாமீ! முன்னம் முன்னம் - முதல் முதலில், வாயால் - உன்வாயாலே, மாற்றுதே - மறுக்கா தொழியவேணும்; (அன்றியும்), நேசம் நிலே - சேர்த்திருக்கிற வாசற்படியை யுடைய, கதவம் - கதவை, நீ நீக்கு - நீயேதிறக்கவேணும்' என்கிறார்கள்.

வ்யா.—(நாயகனுய்நின்ற நந்தகோபனுடைய கோயில்காப்பா னே) - ஸ்ரீநந்தகோபர் திருமாளிகைக்குக் காவலாய் எங்களுக்கு நிர் வாஹகனானவனே! "நாயகன்" என்று - ஸ்ரீநந்தகோபரைச் சொல் லிற்றாகுமாம். 'இவர்களால்பெறுமவனன்றோ நாயகனுவான், இவனே "நாயகன்" என்கிறது என்?' என்ன; "வாவிஷ்டகேஷ ஸ்ய வயஸ்ய வாணீகுஸ்ய வணிகஸ்ய । ஸ்வாமயுவதயா ஊஹெள தவஸ்வாஹாயுவாநுலவெஸ்" (கஉகூ) என்று - பல விடத்தி ஆசார்யனுலே யாகையாலே, உபகாரகனே "நாயகன்" என்கி றார்கள்; ப்ரதாநஸேஷியிற்காட்டில் த்வாரஸேஷிகளே எங்களுக்கு ஸேஷிக ளென்கிறார்கள். (நந்தகோபனுடைய கோயில்) - நாங்கள் ஆச்ரயிக்கிறவன் பரதந்த்ரன்; தங்களே ஸேஷிகளாகவைக்க இசைவா ரோடே கலந்து பரிமாறவிறே இவன் இங்குவந்து அவதரித்தது. "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ" என்று-பரமபதத்திலும் தான் பரதந்த்ரனுய் அவர்களிட்ட வழக்காயிறேயிருப்பது. (கோயில்காப் பானே) - சிறுபெண்களாகையாலே, அவன் தொழிலேயிட்டுச் சொல் லுகிறார்கள். "இன்னது பிடிப்பான்" என்னுமாபோலே; அவனும் உகக்கும்படியாலே சொல்லுகிறார்களாகவுமாம். இத்தால் - ஸேஷ

"நாயகனுய் நின்றவனே! நந்தகோபனுடைய கோயில்காப்பானே!" என்று சப்தார்த்தம் விவக்ஷித்து, நாயகனுகைக்கும் கோயில்காப்பானுகைக் கும் ஹேதுவாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸ்ரீநந்தகோபர் இத் யாதி.) இவர்களால் பெறுமவன் என்றது - இப்பெண்களால் பெறப்படுமவ னான க்ருஷ்ணன் என்றபடி. ஆசார்யனைப்போலே உபகாரகத்வோ உபசரி த்து "நாயகன்" என்றார்களென்று ஒரு பரிஹாரம் அருளிச்செய்து, ஸேஷி த்வத்தைப்பற்றச்சொல்லுகிறார்களென்று பரிஹாராந்தரம்அருளிச்செய்கிறார் (ப்ரதாநேத்யாதி.) ஸ்வாபதேசத்தில், த்வாரஸேஷிகள் - தநியர். நீக்கள், "க்ருஷ்ணன்கோயில்" என்றதே "நந்தகோபன்கோயில்" என்கிறது என் னென்ன; அருளிச்செய்கிறார்கள் (நாங்கள் இத்யாதி.) பேரையிட்டழையாதே "கோயில்காப்பான்" என்றதுக்கு இரண்டுவிதமாகத் தாத்பர்யம் அருளிச்

வ்ருத்தி ப்ரயுக்தமான பேரே இவ்வாத்மாவுக்குப் பேர்என்னுமிடன் தோற்றுகிறது. "யயோரிதம்ஸெஷ ஊதீரிதெஜதெநஃ" (கசுO) என்னக்கடவதிறே.

(கொடித்தோன்றும் தோரணவாசல் காப்பானே) - அவன் கண்ணுலே "போங்கோள்" என்று சொல்ல, திருவாசல் காக்கிற வனே வந்து எழுப்புகிறார்கள். "கோயில் காப்பான்" என்று - அங்குத்தைக்கும் நிர்வாஹகனுப், அவன் தன்னையேகொடித்தோன்றும் தோரணவாசல்காப்பா னென்னவு மாம். கூத்தராதிபதிதன்னை, "கோயில் காப்பான்" என்று, வேறே திருவாசல் காப்பானைச்சொல் லிற்றுகவுமாம். 'ஆர்விக்கும்பண்ணுகிறார்களோ?' என்று பயப்பட்டு எல்லார் கால்களிலும் விழுகிறார்கள். (கொடித்தோன்றும் தோரண வாசல் காப்பானே) - ஆர்த்த ரக்ஷணத்துக்குக் கொடிகட்டித் தோர ணமும் நட்டுவைத்தாற்போலே, பெண்கள் தடுமாற்றம்நீர முகம் கருகைக்கு அன்றே உன்னை இங்கு வைத்தது?

(மணிக் கதவம் தாள்திறவாய்) - "பொன் னியலும் மாடக் கவாடம் கடந்துபுக்கு" என்னுமாபோலே, புகுவாரைத் தன்னழ காலே காற்கட்டும் கதவினுடைய தாள்திறவாய். திருவாசலுக்குள் புகுவாரைக் காற்கட்டும் இது; அவன் புக்காரைப் புறப்படாதபடி காற்கட்டும் தன்னழகாலே.

"தாள் திறவாய்"என்றவாறே, அவன், 'பபமுள்ள தேஹத்திலே மத்பாகாத்ரத்திலேவந்துதிறக்க அழைக்கிற நீங்கள் ஆர்?' என்ன;

செய்கிறார் (சிறுபெண்கன்இத்யாதி.) இரண்டுதாத்பர்யத்துக்கும்சேர ஸ்வா பதேஹத்திலே பலிப்பிக்கிறார் (இத்தால் இத்யாதி.)

அங்குத்தைக்கும் நிர்வாஹகனு யென்றது - வாசலுக்கும் காப்பானே யென்றபடி. 'கோயில் என்றது - திவ்யதேஹவாசியாக விவக்ஷித்து, மூன்றும் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கூத்தரேத்யாதி.) திருவாசல் காக்குமவரை அநுமதிகொண்டால் அமையாதோ? இப்படி இவர்களே யழைப்பான் என்? என்ன,—(ஆர்இத்யாதி.)

கதவு கால்கட்டுதையை ஸத்ருஷ்டாந்தமாக உபபாதிக்கிறார் (திருவாச லுக்குள் இத்யாதி.,

"எங்களுக்கு வாய்நேர்ந்தான்" என்ன அமைந்திருக்க, "சிறுமியர்" என் றதிலிடத்தில் - ஸ்த்ரீத்வம் சொல்லுகைக்கும், "ஆயர்" என்ற - இடையர் ஸம்பந்தம் சொல்லுகைக்கும், "சிறுமியர்" என்ற - பால்யம் சொல்லுகைக்

"ஸயா நாஸவஹாரி" (கூக) இருந்தவிடத்தில்பயம்என்?'என்ன, காலம் த்ரேதாயுகமாய், தமப்பனார் ஸம்பராந்தகனுமாய், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகளாய், மந்த்ரிகள் வலிஷ்டாதிகளாய், ஊரும் திருவயோத்யையாய்ப் பயமற்றிருக்கிறதோ? காலம் கலிக்குத் தோள் தீண்டியான த்வாபராந்தம். தமப்பனார் ஸாது, ஸ்ரீகந்தகோபர்; இவர்கள் சிறுபிள்ளைகள், அதுக்குமேலே நிம்பர்கள்; ஊர் இடைச்சேரி; கம்ஸன் ஸத்ரு, எழும்பூண்டுகளெல்லாம் அஸுரப்பூண்டுகள்; பயங் கெட்டிருக்கலாமோ? என்ன; 'பெண்களுக்குப்பயப்படவேணுமோ?' என்ன, 'ஸமர்ப்பணைகை பெண்ணன்றோ?' என்ன; 'அவள் ராக்ஷஸி நாங்கள் * ஆயர்சிறுமியர்; இவனுக்கு என்வருகிறதோ! என்று வயிறுபிடிக்கும் இடையர்க்குப் பிறந்தவர்களன்றோ?' என்ன; 'பூதனைக்குப் பின்பு இடைச்சிகளுக்கன்றோ பயப்படவேண்டுகிறது?' என்ன; (ஆயர் சிறுமியரோமுக்கு) - க்ரித்ரிமமறியாத சிறுபெண்க ளென்ன;

'வார்த்தையிலே அறியலாம், வந்த கார்யத்தைச் சொல்லுங்கோள்' என்ன; (அறைபறை)-நோன்புக்குப் பறைவேண்டி வந்தோ மென்ன, 'அதுவாகில் திருப்பள்ளியுணர்ந்தால் விண்ணப்பம் செய்கிறோம், அவ்வளவும்நில்லுங்கோள்' என்ன; (மாயன்இத்யாதி.)-நீ இன்று அறிவிக்க வேண்டாதபடி கென்னேற்றே சொல்லிப் போந்தான். (மாயன்) - பெண்கள்கோஷ்டியில் தாழ நின்று பரிமாறினபடி. (மணிவண்ணன்) - தாழநில்லாவிடிலும் விட வொண்ணுத வடிவழகு; பூஅலர்ந்தாற்போல வார்த்தைசொல்லுகிறபோதை ஓஷ்டஸ்புரண மென்னவுமாம்; "வாஸீஸீஸாது" (கூஉ)

கும் ப்ரஸ்ய ப்ரஜிவசரமுகேந பாவம் அருளிச்செய்கிறார் (தான்திறவாய் இத்யாதி.)

மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (வார்த்தையிலே இத்யாதி.) அறைதல் - சப்திக்கையாய், அப்படிப்பட்ட பறையென்ற சப்தார்த்தம் திருவுள்ளம் பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (நோன்புக்குஇத்யாதி.) நீலமணிபோன்ற வடிவுடையவனென்ற சப்தார்த்தமாய் ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து, 'வாய்நேர்ந்தான்' என்றதைக் கடாகரித்து, மணி - பத்மராகமாய், வண்ணம் - அதன்நிறத்தின் வர்ணமாய், தாத்பர்யார்த்தரம் அருளிச்செய்கிறார் (பூஇத்யாதி.) ஸ்புரணம் - ப்ரகாசம். வார்த்தை சொல்லும்போதைத் திருவதரத்தில் சிவப்பை "ஸ்ரீமான்" என்றது என்று திருவுள்ளம் பற்றி ப்ரமாணம் காட்டுகிறார் (வாக்மீ இத்யாதி.)

(நென்னலே) - உன்காலைப் பிடிக்கவேண்டுகிற இன்று போலேயோ, அவன் காலைப் பிடிக்க இருந்த நென்னேற்றும்; ஒரு காளே! என்கிறார்கள். (வாய்நேர்ந்தான்) - 'ஒலக்கத்திலே ஒரு வார்த்தை சொன்னாலில் மெய்யாக வேணுமோ?' என்ன; "கூஷ்ணே! நஜெஹொவாவஹொஹவெசு" (கசுஉ) என்று ஒருத்திக்குச் சொன்ன வார்த்தை அவள் விஷயத்தில் பழுதாய்த்த தாகிலன்றே இவ்வார்த்தையும் பழுதாவதென்ன:—

'சொன்னேனே யாகிலும் நீங்கள் ப்ரயோஜநாந்தரபரைக ளன்றோ?' என்ன; (தூயோமாய் வந்தோம்) - "பறை" என்று-ஒரு வ்யாஜம், அநந்யப்ரயோஜநைகள் நாங்கள். அதாவது - அவனுக்கு மங்களாசாஸநம் பண்ணுமதொழியத் தங்களுக்கு ஒன்றின்றிக்கே யிருக்கை. (வந்தோம்) - அவன் செய்வதை நாங்கள் செய்தோ மென்கை. 'நீங்கள் அநந்யப்ரயோஜநைகளென்கைக்கு அடையாளம் என்?' என்ன; (துயிலெழ பாடுவான்) - திருப்பள்ளியெழுச்சி பாட வந்தோம். "ஹஉயாவொயி தஸ்ரீஆநு ஹுவஹுவஹுஉவாரு நஉஃ" (கசுச) என்று - பிராட்டி உறங்குகிறபடியைக் கண்டு உகந்தாள், இவர்கள் இவளுணரும்படியைக் காண ஆசைப்படுகிறார்கள்.

'அங்நேனாகில், திறக்கிறேன்கில்லுங்கோள்' என்ன; (வாயால் முன்னமுன்னம் மாற்றுதே) - எங்களே முற்படநிஷேதியாதொழிய வேணும்; நெஞ்சால் நினைத்தா யாகிலும் வாயாலே நிஷேதியா தொழியவேணும். உன் கையதுகிடாய் இவர்களுக்கு; அவன் கை

"வஹலிஆநு நீதிஆநுவா ஸ்ரீஸ்ரீஆநுஸ துஹிவாரு ணஃ" என்ற வசகசேஷம், "நென்னல்" என்ன அமைந்திருக்க, 'நென்னலே" என்ற ஏகாரத்துக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார்(உன்காலே இத்யாதி.) "சொன்னேன்" என்னுதே "வாய்நேர்ந்தான்" என்றதாலே ச்லாக்யதை தோன்றுகையாலே அதுக்குப் பாவத்தை அருளிச்செய்கிறார் (ஒலக்கத்திலே இத்யாதி.) ஒருத்திக்கு - த்ரௌபதிக்கு.

பிராட்டியைப்போலே உறங்குகிற போதையில் அழகிலே ஈடுபட்டிருக்க வேண்டியிருக்க, திருப்பள்ளியெழுச்சிபாட வரக்கடவோமோ? என்ன, அருளிச் செய்கிறார் (ஸமயேத்யாதி.)

நெஞ்சிலே நிஷேதிக்கையை நினைத்து நில்லுங்கோ ளென்றதாகத் திரு வுள்ளம் பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார்(எங்களே இத்யாதி.) "முன்ன

யதிறே வாணுள். ''வய்யுதாழ்'' (கஙுடு) என்றவர்தாமே, '' சு ஹ்ரா ஹிவ்ஹ-ஹ்யெர்ஹவதா'' (கஙுசு) என்ற பின்பிறை அவன் ஸத்தை பெற்றது. (அம்மா) - பச்சையிடுகிறார்கள். 'உள்ளிருக்கிறவனே நாதன்? நீ யல்லையோ?' என்ன; 'தாளையுருவிக்கதவைத்தள்ளிக் கொடுபுகுருங்கோள்' என்ன,

(நீ நேசநிலைக்கதவம் நீக்கு)-'அதுஉன்னிலும் பரிவுடைத்தான கதவு; எங்களால் தள்ளப்பாகாது: நீயே திறக்கவேணும்' என்கிறார்கள். சேதநாசேதநவிபாகமின்றியே, இவ்வூரிலுள்ளதெல்லாம் அநுகூலமாயிருக்கிறபடி; கம்ஸன்படைவீட்டில் எல்லாம் ப்ரதிகூலமாயிருக்குமா போலே. (நேசநிலைக்கதவம்) - செறிக்திருக்கிற கதவையும் நிலையையும். (நீக்கு) - நீயே வந்து திறக்கவேணும். (கசு)

ஸ்வாபதேய வ்யாக்யாநம்.

அ.—பதினைரும்பாட்டு. (நாயகனாய் இத்யாதி.) இப்பாட்டில் - முன்பு உணர்த்தினவர்களும் உணர்ந்தவர்களும் எல்லாரும் கூடிப் பகவதநுபவத்துக்குத் தேஶிகனான ஆசார்யன் திருமாளிகையிலே புக்கு, அங்குக்கோயில்காப்பாணியும் திருவாசல்காப்பாணியும் எழுப்புகிறார்கள். ஆசார்ய ஸம்பந்த கடகரை முன்னிட்டு ஆசார்யனைத் தொழுகையும் பெரியோர்செயலிறே.

வ்யா.—(நாயகனாய்நின்ற) - தன்னுடைய ஸுஶீல்யம் வித்தைக்கைக்காகத் தனக்குப் புறம்பாயிருப்பான் ஒரு ஸுஶீலனைத் தேடிப் போகவேண்டியிருக்கையன்றிக்கே, தானே ஸுஶீல்யகாஷ்டையிலே நிற்கிற. (நந்தகோபனுடைய) - பகவதநுபவ ஜநித ஆநந்த நிர்ப்பரனுய் ஸம்ஸ்ரீதராஷ்கனான ஆசார்யனுடைய. (கோயில்காப்பானே) - கோயிலுண்டு - அவனுக்கு ப்ரதிபாதகத்வேந இருப்பிடமான திருமந்த்ரம்; அத்தை அதிகாரிகள் செவிப்படுத்தாதபடி ரக்ஷிக்குமவனே!

(கொடிதோன்றும் தோரணவாசல் காப்பானே) - இவனுடைய ரக்ஷகத்வம் விளங்காநின்றுள்ள அகாரமஸ்ஸப்தார்த்தங்

முன்னம்'' என்ற வீப்ஸையாலே - நோன்புக்கு ப்ரதமம் விக்நவார்த்தை சொல்லாதொழியவேணு மென்னும் இவர்களபிப்ராயத்தை அருளிச்செய்கிறார் (உன் கையது இத்யாதி.)

''நேசம்'' என்றதன் அர்த்தம் (அது இத்யாதி.) ''நேசம்'' என்றதுக்கு - செறிவாக அர்த்தாந்தரம் அருளிச் செய்கிறார் (செறிந்து இத்யாதி.) (கக)

களைக் காக்குமவனே! (மணிக்கதவம் தாள்திறவாய்) - ஜ்ஞாநாகந்த ஸ்வரூபனுகையால்ல ஸ்லாக்யமா யிருக்குள்ள ஆத்மஸ்வரூபாநு பவத்தையும், அதால் வரும் ஸ்வஸ்யாதந்த்ரிய ப்ரதிபத்தியையும் தவிர்த்தருளாய்.

'பயமுள்ள தேஸத்திலே அர்த்தராத்ரத்திலே வந்து எழுப்பு கிறவர்கள் ஆர்?' என்ன; (ஆயர் சிறுமியரோமுக்கு) - "எம்பெரு மானே உபாயோபேயம்" என்று அத்யவஸித்திருக்கும் ஜ்ஞாநஜந் மாக்கள் திருவம்ஸத்திலே பிறந்த பகவதநந்யார்ஹ ஸேஷபூதரான பாலர்களான நமக்கு. 'நீங்கள் வந்த கார்யம் ஏது?' என்ன; (அறை பறை) - த்வங்கிற வாத்யம் வேண்டிவந்தோமென்ன; - புருஷார்த் தம் வேண்டிவந்தோ மென்ன; 'ஆகில், திருப்பள்ளி யுணர்ந்த அநந் தரம் விண்ணப்பஞ் செய்து தருவிக்கிறேன்' என்ன; (மாயன்மணி வண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்) - ஆஸ்ரிதபரதந்த்ரனுய் ஸுலபனுய் ஸ்ரமஹரமான வடிவையுடைய எம்பெருமான் நென் னேற்றே பறைதருகிறே மென்று மநோபூர்வகமாகச் சொல்லிவைத் தான். 'ஆகிலும், நீங்கள் ப்ரயோஜநாந்தர பரரன்றே?' என்ன,— (தூயோமாய் வந்தோம்) - பறையென்றது - வ்யாஜமாத்ரம்; நாங்கள் அநந்யப்ரயோஜநராய்வந்தோம். அநந்ய ப்ரயோஜநருக்குக் கர்த்தவ் யம் ஏது?' என்ன,—(தூயிலெழ பாடுவான்) - திருப்பள்ளியெழுச்சி பாட வந்தோம்.

'ஆகில்நில்லுங்கோள், திறக்கிறேன்' என்ன; (வாயால் முன்ன முன்னம் மாற்றுதே யம்மா)-வாக்காலே முந்துற முன்னம் எங்களை நிஷேதியாதேகொள். உள்ளிருக்கிறவனே ஸ்வாமி? நீ எங்களுக்கு ஸ்வாமியன்றே? 'ஆகில், கதவைத் தள்ளிக்கொண்டு புகுருங்கோள்' என்ன,—(நீ நேச நிலைக்கதவம் நீக்கு) - நீ வாவெனிலும், ஸ்நேஹ யுக்தமான நிலையையுடைத்தான கதவைத் திறந்து விடாய்; நீ எம் பெருமானிடத்தில் ப்ரேமாதிஸயத்தாலே அதிகாரிகளுக்கு அவனை உள்ளபடி காட்டாதாப்போலே ஆத்மஸ்வரூபம், ஸ்வவைலக்ஷண் யத்தாலே, அதிகாரிகளுக்கும் பகவத்விஷயத்தை மறைக்கக்கடவதா யிறே யிருப்பது. (கசு)

அ.—பதினேழாம்பாட்டு இவர்களைத் திருக்காப்புநீக்கி உள்ளே புகுரவிட, ஸ்ரீநந்தகோபர் தொடக்கமானுரை எழுப்புகிறார்கள். முற்பட க்ருஷ்ணனைப் பெண்கள் களவுகாண்கிறார்களோ வென்று நினைத்துக் காவலாகப் புறக்கட்டிலே கிடக்கிற ஸ்ரீநந்தகோபரை

எழுப்புகிறார்கள்; அரிருத்தாழ்வானை யகப்படக் களவு காணக்கடவ பெண்கள்; அவனழகுக்கும் வாய்த்தலையாய் "வஹாக்ஷா நுநுயு உநுயு" (கஉஎ) என்கிற க்ருஷ்ணனைக் களவுகாணச் சொல்ல வேணுமோ?

மூ.—அம்பரமேதண்ணீரே சோறேயறஞ்செய்யும்
எம்பெருமான்நந்தகோபாலாவெழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே
எம்பெருமாட்டி யசோதாயறிவுறாய்
அம்பரமூடறுத் தோங்கியுலகளந்த
உம்பர்கோமானே யுறங்காதெழுந்திராய்
செம்பொற்கழலடிச் செல்வாபலதேவா
உம்பியும்நீயு முறங்கேலோரெம்பாவாய்.

படி. (புகழ்போற்றி)-தாயுங்கூட உதவாத தலையிலே அகாயாஸுர திருவடிகளாலே ஸகடாஸுரனை யழித்த புகழ். (போற்றி) - ராமாவதாரத்திற்காட்டில் மங்களாஸாஸநம் பண்ணவேண்டி யிருக்கை. ராமாவதாரத்துக்கு, பிதா ஸம்பரார்த்தகன்; ஊர் திருவயோத்தியை; புரோஹிதர் மந்த்ரவாதிகளான வஸிஷ்டாதிகள்; பிள்ளைகள் * ஆண் திறல்மீளிமொய்ம்பிலரக்கன் குலத்தைத் தடிந்தவர்கள்; "ஊஹூ" (களஎ) என்னும்படி தாங்கள் குணவான்கள்: இங்கு, மாதாபிதாக்கள் ஸாது இடையர்; ஊர் இடைச்சேரி; கம்ஸாதிகள் எதிரிகள்; ஸ்ரீ ப்ருந்தாவநத்தில் முனைத்தெழும் பூண்டுகளடைய ராக்ஷஸர்கள்; தமையன் ஒருக்ஷணம் தப்பில், பாம்பின்வாயிலேவிழும் தீம்பன்; பூதநாதிகளாலே பிறந்த அபாயங்களுக்கு ஓர் அவதியில்லை; ஆன பின்பு, இனி மங்களாஸாஸந மொழியக் காவலில்லை.

(கன்று இத்யாதி.) - ஸத்ருவையிட்டு ஸத்ருவை யெறிந்தால் ஸங்கேதித்து வந்து இருவருமொக்க மேல்விழுந்தார்களாகில் என் செய்யக்கடவோம்! என்று வயிறுபிடிக்கிறார்கள். (க) குஞ்சித்த திருவடிகளுக்குத் திருப்பல்லாண்டுபாடுகிறார்கள். (கன்றுகுணிலா)-கன்றை எறிதடியாக. குணில் - எறிதடி.

ராமாவதார அபதாநத்துக்கு ஒருகால் மங்களாசாஸநம் பண்ணி, இது தொடங்கி மேலெல்லாம் க்ருஷ்ணவதாரவ்ருத்தாந்தங்களைச் சொல்லிப் போற்றுகைக்கு நிமித்தத்தைப் பலபடியாக உபபாதிக்கிறார் (ராமாவதாரத்தில் இத்யாதி.) "ஹகஹோ தஹவி நாராஹம் கூஹ்ஷொவ்ருஹாவநம் யயள" என்று தொடங்கி, "கூயிரஹவு தி ஷ்ஹாயி ஹ்ருதெஹ்ரிஹ ஹிஹாரிஹ" என்ற ப்ரமாணத்தைக் கடாகித்து, காளியன்மடுவிலே விழுகையே பாம்பின் வாயிலே புகுருகையென்று அருளிச்செய்கிறார் (தமையன் இத்யாதி.)

கன்றையெறிந்தால் இதற்கு "போற்றி" என்னவேணுமோ? என்ன; அருளிச்செய்கிறார் (சத்ருவை இத்யாதி.) வத்ஸாஸுரனும் கபித்தாஸுரனும் சத்ருக்களென்று கருத்து. "எறிந்தாய் கரம்போற்றி" என்னவேண்டியிருக்க, கழலுக்கு ப்ரஸக்தி யேதென்ன; அருளிச்செய்கிறார் (குஞ்சித்த இத்யாதி.) இரண்டும் ப்ரஸக்தங்களாகிலும் அடிவிடாதவர்க ளாகையாலே கழலேப்போற்றினர்களென்று கருத்து.

(க) குஞ்சித்த - மடித்த.

(குன்று இத்யாதி.) - இதுக்கு முன்பு இந்த்ரனுக்காகச் செய்த செயல். இப்போது அவன்தான் பகையானபடி. மலையைக் குடையாக எடுத்துப் பசுக்களுக்கும் இடையர்க்கும் வந்த ஆபத்தைப் போக்கினபடி. அதுகூலன் ப்ரதிகூலித்தால், செய்யலாவதில்லையிறே. (குணம்போற்றி) - பகிராஹதத்தாலே கையோயுந்தனையும் வாஷிக்க, மலையெடுத்துக்கொண்டு நின்ற ஆர்ஞுஜம்ஸ்யகுணத்திற்கு மங்களாஸாஸநம் பண்ணுகிறார்கள்.

(வென்று பகைகெடுக்கும் இத்யாதி.) - இவன்பக்கல் பரிவாலே, இவன்மிடுக்கைக் கண்டு கண்ணைச்சிற் படுவர் என்று பயப்பட்டு, அத்தை விட்டு, 'இவ்வேலன்றே இவ்வ்யாபாரமெல்லாம் பண்ணிற்று' என்கிறார்கள். "மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன்" என்றிறே இவர்கள்படி. சக்ரவர்த்தி விற்பிடிக்கப் பெருமாளும் விற்பிடித்தாற் போலே, "கூர்வேல்கொடுந்தொழிலன்" என்னுமவர் மகனுகையாலே, வேலே ஆயுதம். (வென்று பகைகெடுக்கும்) - ஆஸ்ரிதவிரோதிகளான ப்ரதிபக்ஷத்தை அறச்செய்து மாய்க்கை. (நின்கையில்வேல்போற்றி) - வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டியிருக்க, அதுக்குமேலே வேலிப்பிடிப்பதே! என்று வேல் பிடித்த கைக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள்; "வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு" என்று - ஆயுதங்களுக்கு மங்களாஸாஸநம் பண்ணினாறேற தமப்பனார்; "மதேஜலே ஸேதுபந்தம், தமப்பனாருக்கும் மகளுக்கும் பணி" என்று சீயர் அருளிச்செய்வர்.

"அன்றிவ்வுலகமளந்தாய்" என்று தொடங்கி இவ்வளவும் - ஆஸ்ரிதவிரோதிகளே வென்ற ப்ரகாரங்களைச் சொல்லி மங்களாசாஸநம் பண்ணி, அவற்றைக் காட்டிலும் ஆஸ்ரிதனுனவன் பகைத்துவருகையாலே இவ்வபதாநத்துக்கு மிகவும் பரியவேணுமென்று தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (அதுகூலன் இத்யாதி.) ஒருகால் தமோகுணத்தால் ப்ரதிகூலித்தாலும் பொறுக்கவேணு மென்றநுருத்து.

இவ்வளவும் சொன்ன அபதாநங்களால் மிடுக்குத் தோற்றுகையால் அத்தை நினைத்துக் கண்ணைச்சில் வராமைக்காக, 'இவ்வபதாநங்கள இவன் மிடுக்காலல்ல, வேலாலே' என்று அங்யத்ர ஆரோபித்து, அதுவும் இவனதாகையாலே அதுக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார்க ளென்கிறார் (இவன் பக்கல் இத்யாதி.) "பகையை - வென்று - கெடுக்கும்" என்று அவயம் திருவுள்ளம்பற்றி, வெல்லுகைக்கும் கெடுக்கைக்கும் அர்த்தம் அருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதேத்யாதி.)

(என்றென்று) - இதுதானே ப்ரயோஜநமென்கை. "தெஹிதே தேஹிதே" (கஸ்ய) என்னுமவர்களன்றே. ஸம்ஸாரிகள் புறம்பும் கொள்ளுவர்கள், இவன்பக்கலிலும் கொள்ளுவர்கள்; இவர்கள் புறம்பும் கொள்ளார்கள், இவன்பக்கலிலும் கொள்ளார்கள். "ஒன்று நூறுயிரமாகக் கொடுத்துப் பின்னு மாளுஞ்செய்வன்" என்று - அவனுக்கும் தான்கொடுத்து, "ஆத்மாவுங் கைகாட்டி" என்று புறம்பும் தானே கொடுக்குமென்கை. (உன் சேவகமேயேத்திப்பறைகொள்வான்) - உன்னுடைய வீரசரிதமே ஏத்தி உன்னை அநுபவிக்கைக்காக. "உன்னுடைய விக்ரமமொன்றுமியாமலெல்லாம், என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்" என்னுமவர்களிறே.

(இன்று) - இசைவுபிறந்த இன்று என்னுதல்; நீ உறங்க நாங்கள் உறங்காத இன்று என்னுதல். நென்னேற்று வந்தோமோ? ஊராக இசைந்த இன்று என்றுமாம். (யாம்) - பந்துக்களாலே நெடுங்காலம் நலிவுபட்ட நாங்கள். (வந்தோம்) - வ்ருத்தைகள் உறங்க, நாங்கள் ஆற்றுமையாலே வந்தோம்; எங்களிழவுகளெல்லாம் உன்னாலே தீரும். (யாம் வந்தோம்) - எங்கள்வரவு உனக்குப் புண்ணியருக்க, நாங்கள் ஆற்றுமையாலே வந்தோம். (இரங்கு) - எல்லாம்பட்டாலும் அவன் இரங்கினாலல்லது கார்யகரமாகாமை. அத்தலைக்கு இரங்குகை, ஸ்வரூபம்; 'அவனுக்கு என்வருகிறதோ!' என்றிருக்கை - இத்தலைக்கு ஸ்வரூபம்; நாங்கள் பண்ணின மங்களாஸாஸநம் ஸாதநமன்று என்று இருக்கிறார்கள். (உசு)

"என்றுஎன்று" என்றவீப்ஸையாலே-இதுவேஇவர்களுக்கு யாவதாத்ம பாவியென்று தோன்றுகையாலே, இதுக்குப் பலாந்தர மில்லை யென்று தோன்றுகையால் பலித்த அர்த்தத்தை அருளிச்செய்கிறார் (இதுதானே இத்யாதி.) "பறைகொள்வான்" என்றதுக்கு ஸ்வாபதேஸாநுகுணமாக ஸப்தார்த்தம் 'உன்னையநுபவிக்கைக்காக' என்றது.

ஸ்வாபதேஸத்திலே அருளிச்செய்கிறார் (இசைவுபிறந்த இத்யாதி.) 'நென்னேற்று வந்தோமோ' என்றது - கோபவ்ருத்தர் ஸம்மதியாத நேற்று வந்தோமோ? என்றபடி. "யாம்" என்றதுக்கு நாலு தாத்பர்யம் - நிலவறைகளிலே நலிவுபட்ட நாங்கள் என்றும், வ்ருத்தைகளைப்போலே யன்றிக்கே ஆற்றுமைமிகுந்த நாங்கள் என்றும், விச்லேஷதுக்கம் தீருகைக்கு உன்கைபார்த்திருந்த நாங்கள் என்றும், உன்னைப் புண்படுத்தும்படி வரவையுடைய நாங்கள் என்றும்; இவற்றை அடைவே அருளிச்செய்கிறார் (பந்துக்களாலே இத்யாதி.)

ஸ்வாபதேய வ்யாக்யாநம்.

அ.—இருபத்துநான்காம்பாட்டு. (அன்று இத்யாதி.) இப்பாட்டில் - இவர்கள் ப்ராத்தித்தபடியே அவன் திருப்பள்ளியறையில் நின்றும் திவ்யாஸ்தாநமண்டபத்துக்கு எழுந்தருள, அந்நடையழகிலே ஈடுபட்டு வந்த கார்யத்தை மறந்து மங்களாஸாஸநம் பண்ணுகிறார்கள்.

வ்யா.—(அன்று இத்யாதி.) - ப்ரக்ருதி ஸம்பந்த நிபந்நமான அஹங்காரம் ஜகத்தை ஆக்ரமித்த அன்று, அஹங்கார க்ரஸ்தமான இந்த லோகத்தை அஹங்காரத்தினின்றும் மீட்டுத் தன் திருவடிகளாலே அளந்து தனக்காக்கிக் கொண்டவனே! உன் திருவடிகளுக்கு மங்களாஸாஸநம். (சென்று அங்கு இத்யாதி)-இந்தலோகத்தை அஹங்காரத்தினின்றும் மீட்டவளவன்றிக்கே, அந்த அஹங்காரத்துக்குப் பிறப்பிடமான இடத்தே சென்று தர்ஸநீயமான ப்ரக்ருதி ஸம்பந்த நிர்வாஹகமான அஹங்காரத்தை அழித்தவனே! உன்னுடைய பராபிபவநஸாமர்த்யத்துக்குப் பல்லாண்டு. (பொன்றச் சகடம் இத்யாதி.) - காமக்ரோதங்களே ஸ்வரூபேண நசிக்கும்படி உன் திருவடிகளாலே உதைத்தவனே! உன்னுடைய யஸஸ்ஸுக்குப் பல்லாண்டு. (கன்று குணில் இத்யாதி.) - லோபத்தை எறிதடியாக எறிந்து நஸிப்பித்தவனே! உன்னுடைய குஞ்சிதமான திருவடிகளுக்குப் பல்லாண்டு. இவ்வளவில் ப்ரதிகூலர்விஷயத்தில் செய்யும் அம்ஸத்தைச் சொல்லிற்று; இனி அநுகூலர் ப்ரதிகூலித்தால் செய்யும் அம்ஸத்தைச் சொல்லுகிறது:—(குன்று இத்யாதி.) - இந்த்ரன் ஸிலாவர்ஷம் வர்ஷித்தபோது பர்வதத்தைக் குடையாகக் கொண்டு கோகோபரக்ஷணம் பண்ணினாற்போலே, அஜ்ஞாநகார்யமான அஹங்காரம் இவ்வதிகாரிக்கு விஷயப்ராவண்யத்தை உண்டாக்குவதற்கு ப்ரதிக்ரியையாக வைதிகமாய்க் கைங்கர்யரூபமான விஷயப்ராவண்யத்தை உண்டாக்கி, ஸ்வப்ரபந்நஜந ரக்ஷகனும்படியைச் சொல்லுகிறது. ஆக, இப்படி ஆஸ்ரிதரக்ஷகனானவனே! உன்னுடைய ஸீல குணத்துக்குப் பல்லாண்டு. (வென்று பகைகெடுக்கும் இத்யாதி) - அஹங்காரத்தை ஜயித்து தத்விஷயவைமுக்யத்தை மாற்றும் நின் திருக்கையில் திருவாழியாழ்வானுக்குப் பல்லாண்டு. (என்று என்று இத்யாதி.) - இப்படி பல்லாண்டு பாடுகையே யாத்ரையாய், உன்

னுடைய வீரசரிதத்தையேத்திப் புருஷார்த்தத்தை லபிக்கைக்காக ஸத்வம் தலையெடுத்த இன்று உன்கை பார்த்திருக்கும் நாங்கள் வந்தோம்; நீ க்ருபை செய்தருளவேணும். "எத்திப் பறைகொள் வான்" என்கிற இடத்தில், ஏத்துகைக்கு அநந்தரம் புருஷார்த்த லாபமாகையாலும், ஏத்தாதபோது புருஷார்த்தலாபம் இல்லாமை யாலும் ஏத்துகையே புருஷார்த்த மென்கிறது. "இரங்கு" என்று - க்ருபையே ஸாதந மென்கையாலே, "வந்தோம்" என்று - ருசிகார் யத்தைச் சொல்லுகிறது. (உசு)

அ.—இருபத்தைந்தாம்பாட்டு. 'உங்களுக்குவேண்டுவது என்?, என்ன,—ஏதேனும் ப்ரதிபந்தகம் உண்டேயாகிலும் நீயேபோக்கி எங்கள் துக்கமெல்லாம் கெட விஷயீகரிக்கவேணு மென்கிறார்கள்.

மூ.—ஒருத்திமகனாய்ப்பிறந்தோரிரவில்
ஒருத்திமகனாயொளித்துவளரத்
தரிக்கிலாளாகித் தான்தீங்குநினைந்த
கருத்தைப்பிழைப்பித்துக் கஞ்சன்வயிற்றில்
நெருப்பென்னநின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்துவந்தோம் பறைதருதியாகில்
திருத்தக்கசெல்வமுஞ் சேவகமும்யாம்பாடி
வருத்தமுந்தீர்ந்து மகிழ்ந்தேலோரெம்பாவாய்.

பதவுரை:—ஒருத்தி - ஒப்பற்ற தேவகிப்பிராட்டிக்கு, மகனாய் - பிள்ளை யாக, பிறந்து - திருவவதரித்து, ஓரிரவில் - அந்த இரவிலேதானே, ("எல் லாம் தெய்வங்கை யசோதைபெற்றாள்" என்கிறபடியே கண்ணனுடைய பாலசேஷ்டிதங்களையெல்லாம் அநுபவிக்கையாலே), ஒருத்தி - அத்விதீயை யான யசோதைப்பிராட்டிக்கு, மகன் ஆய் - திருமகனாக, (கம்ஸனுடைய

இருபத்தைந்தாம் பாட்டு. (ஒருத்தி இத்யாதி.) "கஞ்சன் வயிற்றில் நெருப்பென்னநின்ற" என்றதத்தையும், "வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து" என் றதத்தையும் கடாகூத்து, "மாரிமலை முழைஞ்சில்" என்கிறபாட்டோடே ஸங் கதி தோன்ற அவதாரிகை அருளிச்செய்கிறார் (உங்களுக்குஇத்யாதி.) 'உங்க ளுக்குவேண்டுவதென்னென்ன' என்றது - "யாம்வந்தகாரிய மாராய்ந்தருள்' என்று தாங்கள் ப்ரார்த்தித்ததை மறந்து மங்களாசாஸநத்திலே மூண்டு இதுக்காக வந்தோ மென்றார்க ளென்று ஸர்வஜ்ஞனவன் நினைத்திருக் கையாலே, நீங்கள் வந்த காரிய மென்னென்று கேட்டானென்கை. 'உண்டே யாகிலும்' என்றது - பகவத்விஷயத்தி லிழியவே ப்ரதிபந்தகளெல் லாம் "நீரினில் நுசாரும்" என்றிருக்குமவர்களாகையாலே என்று கருத்து.

விஷத்ருஷ்டியில் அகப்படாமல்), ஒளித்து வளர - ஒளித்துக்கொண்டு வளரா நிற்கையில் (தன்னையறியாமல் இவள் வளர்ந்தருளுகிறபடியைக் கேட்டு), தான் - (பின்னுல் படப்புருகிறது) அறியாத தான், தரிக்கிலான் ஆகி - ஸஹி யாதவனுய், (“எவ்வகையாலாவது இவனைக் கொல்லக்கடவோம்” என்று), தீங்கு நினைந்த - பொல்லாங்கை நினைத்திருந்த, கஞ்சன் கருத்தை - கம்ஸ னுடைய எண்ணத்தை, பிழைப்பித்து - வ்யர்த்தமாம்படிபண்ணி, வயிற்றில்- (அவன்) வயிற்றிலே, நெருப்பு என்ன நின்ற - நெருப்புப்போல் அழலும்படி யாக நின்றவனுய், நெடுமாலே - ஆச்ரிதர்பக்கல் பெரும்பித்தனனவனே! உன்னை அருத்தித்து - உன்பக்கல் புருஷார்த்தத்தை இரந்து, வந்தோம் - வந்து ஆச்ரயித்தோம்; பறை தருதி ஆகில் - (எங்களுக்கு) உத்தேச்யத் தைச்செய்வாயாஞல், திருத்தக்க செல்வமும் - பிராட்டி ஆசைப்படத்தக்க உனது ஸம்பத்தையும், சேவகமும் - (அத்தைக் காத்தூட்டவல்ல) வீர்யத் தையும், யாம் பாடி - (உன் பேர்சொல்லப்பெறுத) நாங்கள் உகப்புடன்பாடி, வருத்தமும் தீர்ந்து - உன்னைப் பிரிந்ததும் ச்யஸமும் நீங்கி, மகிழ்ந்து - மகிழ்ச்சியடைந்து, இருப்போம் என்கிறார்கள்.

வ்யா.—(ஒருத்தி)-“ஸஞ்ஜீவிஷ்ணவே ஜநாநாம்ஹரயே தூ” (கௌ) என்கிறபடியே ஸர்வலோகங்களுக்கும் நியாமகனனவனே யுங்கூட நியமிக்குமவளாகையாலே நாட்டில் தனக்கு ஒப்பற்றிருக்கு மவள். (ஒருத்திமகனுய்)-“ஹ்ருதாநாமயோऽவ்யயஸ்ரீதா” (கஅ0) என்று ஸர்வலோகங்களுக்கும் பிதாவானவன் ஒருத்திமகனு வதே! சக்ரவர்த்தி தபஸ்ஸுபண்ணி மாணிக்கம்போலே நாலு பிள்ளைகளைப் பெற்றுற்போலே, கால்வருங்கூடித் தபஸ்ஸு பண்ணி ஒருமகனைப் பெற்றபடி. (மகனுய்ப்பிறந்து) - பிறந்த போதே சொல்லிற்றுச் செய்கை. சக்ரவர்த்தித்திருமகன் பக்வனன பின்பு பித்ருவசந பரிபாலநம் பண்ணினன்; இவன் பிறந்தபோதே,

---

அத்விதீயனாவனென்று விவகித்து ஹேதுபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸ்ரீவேத்யாதி.) ‘நியமிக்குமவளாகையாலே’ என்றது - “உவஹம்ஹரவ்வாதது” என்று நியமிக்கையைப் பற்ற. “ஒருத் தியிக்குப் பிறந்து” என்னலா யிருக்க, “மகனுய்” என்றதாலே - மகனுகத் தக்கவனல்லாதவன் மகனுன னென்ற தோன்றுகையால் வந்த ஈடுபாட்டைக் காட்டுகிறார் (பூதாதாம் இத்யாதி.) எல்லார்க்கும் பிதாவானவன் மகனுகைக்கு ஹேதுவென் என்ன அருளிச்செய்கிறார்(சக்ரவர்த்திஇத்யாதி.) “மகனுய்” என்றதற்கு-மகன்செய்யும் கார்யம்செய்துகொண்டு பிறந்தானென் றும் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பிறந்தபோதே இத்யாதி வாக்யத்ரயத்

"உவஸம்ஹரஷ்வஜாதநு" (சுருதி) என்றுசொல்ல ஆழ்வார்களையும் தோள்களையும் மறைத்தானிறே. (பிறந்து) - கர்மவஸ்யர் படுவதெல்லாம் க்ருபாவஸ்யனுக்கொண்டுபட்டபடி. (பிறந்து) - ஆவிர்ப்பவிக்கலாகாதோ? பத்து மாஸம் வயிற்றிலே யிருப்பார்களாகில், பன்னிரண்டு மாஸம் வயிற்றிலேயிருந்து பிறக்கவேணுமோ? * பன்னிரு திங்கள் வயிற்றில் கொண்டவிறே. "ஷெவகீவெஷ்வவஸ்ருயாஶாவிஷ்ணுதம் உஹாதரா" (எக) என்று - 'பிறந்தானென்கை அவத்யம்' என்று பரிஹரித்தான் ரிஷி. அதுதான் அவத்யமென்று பிறந்தான் என்கிறார்கள். நம்முடைய கர்மம் நம்மோடே அவனை ஜாதீயனுக்கும்; அவனுடைய க்ருபை நம்மை அவனோடே ஜாதீயமாக்கும்; "வரஷம்ஹாஶுஷைதி" (கஅச) என்னக் கடவதிறே. அவன் பிறவி நமக்கென்று கோல, நம்பிறவி அவன் மாதாபிதாக்கள்

தாலே.) "அவதரித்து" என்னுதே, "பிறந்து" என்றதுக்கு உட்கருத்தை அருளிச் செய்கிறார் (கர்மவஸ்யர் இத்யாதி.) "மகளுய்" என்றதாலே பிறப்பு அர்த்தவித்தமாயிருக்கவும். "பிறந்து" என்று லீலேஷித்தது, லோகத்தார் பிறவியிலும் வ்யாவ்ருத்தமென்று தோற்ற வென்று தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ஆவிர்ப்பவிக்கல் இத்யாதிவாக்ய த்ரயத்தாலே.) ரிஷி "ஸுவீர்ஷுதிழி" என்று சொல்லி யிருக்க, இவர்கள் "பிறந்து" என்னக்கூடுமோ வென்ன, அருளிச்செய்கிறார் (தேவகீ இத்யாதி வாக்யத்வயத்தாலே.) 'அது தான் அவத்யம்' என்றது-ஸௌஶீல்யயாதிகளுக்கு அது பூர்த்திகர மல்லாமையாலே யென்று கருத்து. பிறப்புக்குக் கர்மம் அடியாகையாலே அதுஇல்லாதவனுக்குப் பிறப்புச் சொல்லக்கூடுமோ வென்னும் ஸங்கையைப் பரிஹரியாகின்றுகொண்டு ஸௌஶீல்யம் தோற்றும்படியை உபபாதிக்கிறார் (நம்முடைய இத்யாதி.) நம்முடைய கர்மத்தாலே நாம் ஸம்ஸரிக்கையாலே நம்மை யெடுக்கைக்காக அவன் ஜாதீயனுய் வந்து பிறந்து புரையறக் கலக்கையாலே ஸௌஶீல்யம் விளங்குமென்று கருத்து. இதுக்கு த்ருஷ்டாந்தம் அருளிச் செய்கிறார் (அவனுடைய இத்யாதிவாக்ய த்வயத்தாலே.) 'நம்மோடு ஜாதீயனுய்ப் பிறந்தானுகில் அத்தாலே அவனெடுக்கும் படி எங்ஙனே?' என்ன "ஜந்ரு கரூஷ" இத்யாதி வசனத்தை உட்கொண்டு அருளிச்செய்கிறார் (அவன் பிறவி இத்யாதி.) "நமக்கென்று கோல" என்றது - நமக்காக வந்தர

காலில் விலங்குபட்டது படும். நம் பிறவி - நம்மையும் அவனையும் அகற்றுகைக்கு உடலாயிருக்கும்; அவன் பிறவி இருவரும் அணுகுகைக்கு உடலாயிருக்கும்.

(ஓரிரவில்) - அவ்விரவிலே யசோதைப்பிராட்டிக்கும் பிள்ளையாக வேண்டுகையாலே திருவாய்ப்பாடியிலே புக்கு. நாய்க்குட லுக்கு நறுநெய் தொங்காதாப்போலே, கம்ஸாதிகள் தன்மைஸுதிகாக்ருஹத்திலே ஓராராத் தங்க வொட்டிற்றில்லை யென்கை. (ஓரிரவு) - அவ்விரவை யொக்கும் இரவு முன்பும் இல்லை, பின்பும் இல்லை. (ஓரிரவில்) - காலத்ருதபரிணமமில்லாத தேஸத்தில் வஸ்து காலாதீதமான தேஸத்திலே பிறப்பதே! அவர்கள் தங்களோபாதியும் பெற்றில னென்கை. (ஒருத்திமகனாய்) - ஒருத்தி "இவனை மகனாகப் பெறவேணும்" என்று ஆஸ்ரயிக்க, அவளுக்கு அவதாரஸத்தைக் கொடுத்து, இவளுக்கு லீலாரஸத்தை அநுபவிப்பித்தபடி. ஔவதாரத்திலே யாதவ ஸாதீயனுமாய் கோப ஜாதீயனு மானபடி. "ஸுஸ்ராவ தாரொவ்ருஹஸ்ரே யொயம் யஜ்ஞைரொஹ்வே" (கஅஉ) என்ற ரிஷிதானே, "மொவாரொ

னென்று அறியவென்றபடி. உத்தார்த்தத்தை வைதர்ம்ய திருஷ்டாந்த பூர்வகம் விவரிக்கிறார் (நம்பிறவி இத்யாதி வாக்யத்தாலே.)

ஓரிரவிலே - ஒருத்திமகனாய்ப் பிறந்து ஆய்ப்பாடியிலே புக்கு, ஒருத்தி மகனாய் என்று அவ்வயாதீயாஹாரங்களைத் திருவுள்ளம்பற்றி, அவ்விரவில் தானே அங்குப்போகைக்கு ஹேதுவைக்காட்டாநின்றுகொண்டு, தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அவ்விரவிலே இத்யாதி.) 'பிள்ளையாகவேண்டுகையாலே' என்றது - அவ்விரவில்தானே பிள்ளையாகவேண்டும்படி தபஸ்ஸைப்பண்ணுகையாலே என்றபடி. திருவாய்ப்பாடியில் புகுகைக்கு யஸோதாதிகளுடைய பாக்யத்தை ஹேதுவாகக் கீழ் அருளிச்செய்து, கம்ஸாதிகளுடைய தெளர்ப்பாக்யம் ஹேதுவென்று அருளிச்செய்கிறார் (காய் இத்யாதி.) "ஓர்" என்றதுக்கு - ஏகத்வஸக்தீபரமாகக் கீழ் அருளிச்செய்து, அத்விதீயத்வ விவக்ஷயா அவதாரஹேதுவாகையாலே அதிசயார்த்தமென்றும், பிறத்தலிடத்திலிருக்கவொட்டாதபடியாலே அதிக்ரூரமான தென்றும், இரண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அவ்விரவை இத்யாதி வாக்யத்ரயத்தாலே.) இப்போது, "ஓர்" என்றதுக்கு க்ரமேண அன்வயமென்று கண்டு கொள்வது. 'இரண்டுதாய்மார்க்கு ஒருவன் பிள்ளையாம்படி எங்ஙனே சேருவது?' என்ன; அருளிச்செய்கிறார் (ஒருத்தி இத்யாதி.) பிள்ளையாகையால் வர்த்ரஸம் இருவர்க்கும்துல்யம் ஆகையாலே பிள்ளையாகைக்குத் தட்டில்லை யென்று கரு

யாடிவம்வம்ஸம்ஹுஹுஹு

பொருத ஆஸ்ரயமிறே. (தான் தீங்குநினைந்த) - பயத்தாலே பரிந்து மங்களாஸாஸகம் பண்ணும் விஷயத்திலே தீங்கு நினைத்தது, துஷ்ப்ரக்ருதியாகையாலே. (தான்) - உத்தரகண்டத்திலே படப் புகுறை பாடறியாத தான். (தீங்கு நினைந்த) - தங்கள் வாயாலே சொல்லமாட்டாமையாலே "தீங்கு" என்கிறார்கள். அதாவது - பூதகையுள்ளிட்டாரை வரக்காட்டியும், வில்லிழவுக்கு என்று அழைத்தும் கலியத் தேடினபடி. (கருத்தைப் பிழைப்பித்து) - பூதகை முதலானார் கலிவுகளைப் பண்ணப்புக அத்தைத் தப்பித் தன்னை கமக்குத் தந்தபடி; அவன் நினைவை அவன்தன்னோடே போம்படிபண்ணி யென்றுமாம். (கஞ்சன் இத்யாதி.) - கம்ஸன் அநாதி காலம் ஸஞ்சிதமான பாபமித்தனையும் கண்ட காட்சியிலே அநுபவித்து அறும்படி நின்றவன். ஆஸ்ரிதர் வயிற்றில்நெருப்பைக் கம்ஸன்வயிற்றில் கொளுத்தினவ னென்கை. அதாவது - பயாக்நி கொளுத்துகை. (நெடுமாலே) - இதெல்லாம் படவேண்டிற்று, ஆஸ்ரிதர்பக்கல் வ்யாமோஹத்தாலே யென்கை. அப்போது ஸ்ரீவஸுதேவர் பக்கலிலும் ஸ்ரீதேவகிபார்பக்கலிலும் திருவுள்ளம் மண்டின படி யென்றுமாம்.

(உன்னை) - அர்த்தித்வத்தில் நிரபேக்ஷனை உன்னை; ஸ்ரீவைகுண்டத்தில்நின்றும் இரப்பாளனாய் இவ்வளவும் வந்தது ஆர் அபேக்ஷித்து? (நெடுமாலே உன்னை அருத்தித்து வந்தோம் - பண்டே வ்யாமுக்தனை உன்னை அர்த்திக்கையாலே பிச்சின்மேலே

தயத்தில் அந்தர்யாமியிருக்கிறானென்றல், "ஸஸாஸ்ருரொஹி" என்றிருக்கு மவன் ஸஹியானென்று தாத்பர்யம். "தான்" என்றதுக்கு - துஷ்டப்ரக்ருதி யென்று ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து, தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (உத்தரேத்யாதி.) கருத்தை - மநஸ்ஸை, பிழைப்பித்து - பிழையாக்கி - பொய்யாக்கி யென்று சப்தார்த்தமாய், இரண்டுவிதமாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பூதகை இத்யாதி வாக்யத்வயத்தாலே.) 'அவன் நினைவை அவனோடே போக்கினபடி' என்றது - அவன் நினைவு அவனிடத்தில் பலத்தைக் கொடுக்கும்படி தான் ஸங்கல்பித்து என்றபடி

அர்த்தித்வ நிரபேக்ஷதையை உபபாதிக்கிறார் (ஸ்ரீவைகுண்டேத்யாதி.) "நெடுமாலே வந்தோம்" என்று சொல்லவே, இவர்களாசை வித்தமாயிருக்கவும் "அருத்தித்து" என்று சொன்னது - பேராசையாக வந்தோமென்று

பிச்சேற்ற வந்தோம். அர்த்தித்வத்தினளவு எங்கள் வடிவைப் பார்க்க ஆமையும்.

(பறை தருகியாகில்) - எங்களுக்கு உத்தேஸ்யம் செய்குகியாகில். "ஆகில்" என்றது - நம்முடைய அர்த்தித்வாதிகள் அப்ரயோஜகம்; அவன் நினைவாலே பலமென்கை. உன்னழகாலே பிழைப்பியாதே செய்தருளப் பார்ப்பாயாகில் என்னவுமாம்.

(திருத்தக்கசெல்வமும்) - "யஸ்யாஸ்தி நகாதுஜா-ஸுஷ்ட ஸெயம்ஹி தஸ்தேஜஃ" (கஅச) என்று ஸ்ரீயஃபதித்வத்தால் வந்த ஸம்பத்தையும்; பிராட்டி ஆசைப்படும் ஸம்பத் தென்னவுமாம். (சேவகமும்) - அத்தைக் காத்தூட்ட வல்ல வீர்யம். (யாம்பாடி) - உன் பேர் சொல்லப் பெறுத நாங்கள் உகப்போடே அத்தைச்சொல்லி. (வருத்தமும்தீர்ந்து) - உன்னைப்பிரிந்து படும் தாகமும் தீர்ந்து. பிரிக்தார்படும்பாடறிய, உன்னைப்பிரிந்தறியாயே? (மகிழ்ந்து) - கைவல்யம்போலே தாகநிவருத்தி மாத்ரமேயன்று, ப்ரீதிக்குப் போக்குவிடும்படி யாகவேணும். (உடு)

ஸ்வாபதேஸ வ்யாக்யானம்.

அ.—இருபத்தைந்தாம் பாட்டு. (ஒருத்தி மகளைப் இத்யாதி.) இப்பாட்டில், கீழ்ப்பாட்டில் "எத்திப் பறைகொள்வான், இன்றுயாம் வந்தோம் இரங்கு" என்று இவர்கள் அபேக்ஷிக்கையாலே, 'உங்களுக்குச் செய்பவேண்டுவது என்?' என்ன,—நெடுமாலே! நீ புருஷார்த்தத்தைக் கொடுத்தாயாகில், நாமும் உன்னையும்உன்குணங்களையும் ப்ரீதிக்குப் போக்குவீடாகப் பாடி, பட்ட வ்யஸநமெல்லாம் தீர்ந்து மகிழக்கடவோ மென்கிறார்கள்.

விவக்ஷித்து, ஆசையினுடைய பெருமை எவ்வளவு என்னும் ஸங்கையை அருளிச்செய்கிறார் (அர்த்தித்வத்தில் இத்யாதி.)

திருவாலே தக்க செல்வத்தை யென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (யஸ்யேத்யாதி.) 'தத்தேஜஃ' என்றது ஸமஸ்தமாய், தஸ்யதேஜ: என்று கொள்வது. திருவுக்குத் தக்க செல்வம் என்ற விவக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பிராட்டி இத்யாதி.) 'காத்தூட்ட' என்றது - ரக்ஷித்து அநுபவிப்பிக்க என்றபடி.

"வருத்தமும்" என்ற சகாரத்தால் - மிகவும் திஸ்ஸஹதை தோற்றுகையால், அதின்படியெங்ஙனே யென்னும் ப்ரஸ்தாவத்திலே அது சொல்லத்தரமன்று, அநுபவித்தே அறியவேணும்; அது உன்னால் அறியப்போகாதென்று உத்தரம் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (பிரிக்தார் இத்யாதி.) (உடு)

வ்யா.—(ஒருத்தி இத்யாதி.) - அஷ்டாக்ஷீ ப்ரதிபாத்யனுப்க் குணவிக்ரஹ விபூதிவிஶிஷ்டனுப் அவதரித்து.(ஓரிரவு இத்யாதி.)-லௌகிகர் அறிபாத அத்விதீபகாலத்திலே வாஸுதேவ த்வாதஶாக்ஷீ ப்ரதிபாத்யனுப். (ஒளித்து வளர)-குணவிக்ரஹவிபூதிகளாலே ஸங்குசித்து ஸ்வரூபமாத்ரேண வளராநிற்க.

(தரிக்கிலானுஷி) - ஸ்வரூபமாத்ரேண ஈஶ்வரஸத்தையையும் பொறுதவனுப். (தானித்யாதி.)-அநவரதமங்களாஶாஸநம்பண்ணக் கடவ விஷயத்திலே அவனுல் ஒரு உபத்ரவ முண்டாய்ப் பொல்லாமையை நிணைக்கையன்றிக்கே தானே த்வேஷத்தை நிணைந்த அபிப்ராயத்தை வ்யர்த்தமாக்கி அஹங்காரத்தினுடைய வயிற்றிலே கெருப்பைக் கொளுத்தினாற்போலே ஜ்வலித்து, அவனருகே நின்ற ஸ்வஶேஷபூத சேதநவிஷயவ்யாமோஹாதிஶயத்தை யுடையவனே! (உன்னை அருத்தித்து வந்தோம்) - உன்னை அபேக்ஷித்து வந்தோம்.

(பறை தருதியாகில்) - நீ புருஷார்த்தத்தைக் கொடுப்புதியாகில். (திருத்தக்க செல்வமும் சேவகமும்) - பெரிய பிராட்டியாருக்குத் தகுதியான ஸ்வரூபரூபகுணவிக்ரஹ விபூதி விஶிஷ்டனுயிருக்கிற செல்வத்தையும், வீரசரித்தத்தையும். (யாம்பாடி) - அதுவே தாரகமான நாம் பாடி. (வருத்தம் இத்யாதி.) - உன்னைப் பிரிந்து பட்ட வ்யஸநமெல்லாம் நிஶ்ஶேஷமாகத் தீர்ந்து ஆநந்திக்கக் கடவோம்.

(உடு)

அ.—இருபத்தாறும்பாட்டு. 'உங்களுக்கு அபேக்ஷிதம் என்?' என்ன; நோன்புக்குவேண்டும் உபகரணங்களையும் அபேக்ஷிக்கிறார்கள். 'க்ருஷ்ணஸம்ஶ்லேஷாதிஸுகரான இவர்கள் இவற்றை அபேக்ஷிக்கைக்கு அடி என்?' என்னில்;—அந்த ஸம்ஶ்லேஷத்துக்கு ஏகாந்தமான நோன்பை ப்ரஸ்தாவிக்கையாலும், க்ருஷ்ணன் முகத்தை வெளியிலே காண்கைக்கு ஹேதுவாகையாலும், அவனு

இருபத்தாறும்பாட்டு. (மாலே இத்யாதி.) கீழ்ப்பாட்டில் - உங்களுக்கு வேண்டுவதென்னென்று அவன் கேட்க,அதற்கு,"பறைதருதியாகில்"என்று தங்களுக்கு உத்தேச்யத்தைச் சொல்லியிருக்கவும், அவன், முலைமுதலான வற்றிலே ஸக்தனுகையாலே மறந்து மீளவும் கேட்கிறானென்று திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார் (உங்களுக்குஇத்யாதி.) 'ப்ரஸ்தாவிக்கையாலும்' என்றது-கோபவ்ருத்தர் "நீங்கள் நோன்பு நோலுங்கள்" என்று அநுமதி பண்ணியிருக்கையாலும் என்றபடி.'வெளியிலே காண்கைக்கு ஹேது

டைய திருநாமங்களே வாயாரச் சொல்லுகைக்கு ஹேதுவாகையாலும், இடையர்பக்கல் உபகார ஸ்மிருதியாலும் நோன்புக்கு அங்கங்களே வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

மூ.—மாலேமணிவண்ணா மார்கழிநீராடுவான்
மேலையார்செய்வனகள் வேண்டுவனகேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன
பாலன்னவண்ணத்துன்பாஞ்சசன்னியமே
போல்வனசங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே கொடியேவிதானமே
ஆலினிலையா யருளேலோரெம்பாவாய்.

பதவுரை:—மாலே - (ஆஸ்ரித விஷயத்தில்)வ்யாமோஹத்தையுடையவனே! மணிவண்ணா - நீலரத்நம்போன்ற வடிவையுடையவனே! மேலையார் செய்வனகள் - பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்டவற்றுட் சேர்ந்த, மார்கழி நீர் - மார்கழிநீராட்டத்தை, ஆடுவான் - செய்யும்பொருட்டு, வேண்டுவன - வேண்டியவைகளை, கேட்டியேல்-கேட்பாயாகில், ஞாலத்தை எல்லாம் நடுங்க - பூமியெல்லாம் நடுங்கும்படி, முரல்வன - சப்திப்பனவாய், பால் அன்ன வண்ணம்-பால்போன்ற நிறத்தையுடையனவாய், உன் பாஞ்சசன்னியம் போல்வன - உன்னுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யொத்தனவான, சங்கங்கள் - சங்கங்களும், போய்ப்பாடு உடையன - மிக்கபெருமையுடைய, சாலப் பெரும்பறை - மிகவும் பெரிதாயிருக்கின்ற வாத்யங்களும், பல்லாண்டு இசைப்பார் - பல்லாண்டு பாடுவார்களும், கோலம் விளக்கு - மங்கள தீபங்களும், கொடி - த்வஜங்களும், விதானம் - மேற்கட்டிகளுமாம்; (ஆகிய இவற்றை), ஆலினிலையாய் - (பிரளயத்தில்) ஆலிலையிற் பள்ளிகொள்பவனே! அருள் - க்ருபை செய்தருளவேணும் என்கிறார்கள்.

வ்யா.—(மாலே) - முன்பு "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று அபரிச்சேத்யமான மேன்மையையும் நினைத்திருந்

வாகையாலும்' என்றது - நிலவறையிலே இடந்தங்களே நோன்புக்காக க்ருஷ்ணனேடே சேரவிடுகையாலும் என்று கருத்து.

ப்ராப்ய ப்ராபகங்களே நிஷ்கர்ஷிக்கும்போது, "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று - நாராயணத்வத்தைப் புரஸ்கரித்திருக்கையால் அபேக்ஷித்த விடத்திலும், "நாராயணா! மணிவண்ணா" என்னவேண்டியிருக்க "மாலே" என்று வ்யாமோஹகுணத்தையிட்டு ஸம்போதிக்கிறது எங்ஙனே கூடும்? என்ன, அருளிச்செய்கிறார் (முன்பு இத்யாதி.) 'மேன்மையையும்' என்று

தார்கள்; இப்போது - இத்தலைக்கு வாத்ஸல்யமே ஸ்வரூபம் என்று நிலையிட்டார்கள். "ஸரணாகதவத்ஸலே" (கஅடி) என்று - ஸ்ரீ ராமாயணத்துக்கு உள்ளீடான ப்ரதாநகுணத்தைப் பிராட்டி நிலையிட்டாள்; மஹாபாரதத்துக்கு உள்ளீடான வ்யாமோஹ குணத்தை "மாலே" என்கிற ஸம்போதநத்தாலே இவர்கள் நிலைபிட்டார்கள். இவர்கள் பேச்சுக்கேட்டபின்பு பண்டையிலும் பெரும்பித்தனைபடி. (மணிவண்ணா) - அபரிச்சேத்யனுயிருக்கச்செய்தேயும் முன்தானையிலே முடிந்து ஆளலாம்படியிருக்கை. கீழ்ச்சொன்ன வ்யாமோஹம் வடிவிலே நிழலிடுகை. இந்நீர்மையின்றிக்கே காதகனுனலும் விடவொண்ணுத வடிவழகு. பெண்கள் பிச்சுக்கு நிதாநமான வடிவென்னவுமாம். "மாலாய்ப்பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனே" என்னக்கடவதிறே.

'நீங்கள் வந்தது என்?' என்ன;—வந்தகாரியத்தைச் சொல்லுகிறார்கள்; (மார்கழிநீராடுவான்) - மார்கழி நீராடுகைக்கு உபகரணங்

சகாரத்தாலே - "கார்மேனிச் செங்கண்" என்று - வாத்ஸல்யத்தையும் நினைத்தார்களென்கை. இவர்கள் "யாம் வந்தகாரியம் ஆராய்ந்தருள்" என்று சொன்னபோதே திருமுகத்தில் அலர்த்தியையும், வாவென்றவாறே வ்யாமோஹத்தேற வருகையும் கண்டு, வ்யாமோஹமே இவனுக்கு ஸ்வரூபமென்று நிஶ்சயித்தார்களென்ற கருத்து. இவனுக்கு வாத்ஸல்யமே நிரூபகமென்னுமதுக்கு த்ருஷ்டாந்த பூர்வகம் ப்ரமாணம் காட்டுகிறார் (ஸரணாகதத்யாதி வாக்யத்வயத்தாலே.) 'மஹாபாரதத்துக்கு உள்ளீடான' என்றது - அதுக்கு உபநிஷத்தான ஸ்ரீகீதையில் சரமத்தில் "மாம்" என்றதுக்குத்தாத்பர்யமான என்றபடி. இதிலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யங்களாகிற குணவிஶேஷங்கள் சேரக்ப்ரகாசிக்கிறதென்னக்கடவதிறே. இப்போது மாலாகைக்கு ஹேது எது? என்ன; அருளிச்செய்கிறார் (இவர்கள் இத்யாதி.) 'பேச்சு' என்றது-"யாம்வந்தகாரியமாராய்ந்தருள்" என்ற பேச்சு என்றபடி. 'மாலுடையவன்' என்னுதே "மாலே" என்று அத்தையேநிரூபகமாகச் சொல்லுகையாலே பெரும்பித்தன் என்றது. "மாலே" என்றதுக்கு - ஸ்வாதிகனு யென்று அர்த்தாந்தரம் திருவுள்ளம்பற்றி, மணியினுடைய வண்ணம்போலேயிருக்கும் வண்ணத்தை ஸ்வபாவத்தையுடையவனேயென்று ஸப்தார்த்தமாய், அதிஸௌலப்ய ஸ்வபாவத்தை விவக்ஷித்து அருளிச்செய்கிறார் (அபரிச்சேத்யனுய் இத்யாதி.) "மால்" என்றதன் முந்தின அர்த்தத்தையே திருவுள்ளம்பற்றி, ஸௌலப்யத்தையும் அழகையும் விவக்ஷித்து இரண்டாம்தாத்பர்யம் அருளிச்செய்கிறார். (கீழ்ச் சொன்ன இத்யாதி வாக்யத்வயத்தாலே.) 'அழகுவிடவொண்ணுமைக்குஹேதுவோ?' என்ன; அருளிச்செய்கிறார் (பெண்கள் இத்யாதி.)

கள் வேண்டி வர்தோம். ஆஸ்திக்யாதிரேகத்தாலே அங்கே கைப்பட்டிருக்கச் செய்தேயும், அங்கத்தை விடாதொழிகிறார்கள். 'மார்கழி நீராட்டமாவது என்?' என்ன;—இது ப்ரவித்தமன்றேவென்ன; "வ்ரதாகாலொயஜேத" (கஅசு) என்னுமாபோலவும், "நிஷித்யாஹரி தவ்ரு?" (கஅள) என்னுமாபோலவும் ப்ரவித்தமாயிருந்ததோ? என்ன, (மேலையார் செய்வனகள்). அவை போலும் அல்லகாண் இது; ப்ரவித்தமன்காண் இது; ஸ்ருதிஸ்ம்ருதிகளிலும், "யாரஜ்ஞுவஹயாஹுரா ணம்வெஹாரஹ" (கஉக) என்றும், "யதஹாவாரதிரெரஷாஹ" (கஅஅ) என்றும் ஸிஷ்டாசாரமேயிறே ப்ரவித்தப்ரமாணம். 'ஆகில் வேண்டுவது சொல்லுங்கோள்' என்ன; (வேண்டுவன கேட்டியேல்) -

---

"மார்கழிநீராட்டம்" என்கிற நோன்புநோற்கைக்கு வேண்டும் உபகரணங்களே இவர்கள் அபேக்ஷித்திலர்களாகிலும் வ்ருஷ்டிரூபமான பலம்வரத் தட்டில்லை; க்ருஷ்ணன் ஸர்வஸ்மாத் ஞாகையாலே இவர்களுக்கு உபகாரகரான கோபவ்ருத்தர் அபேக்ஷித்த வர்ஷத்தை வர்ஷிப்பிக்கக்கடவனன்றே என்னும் ஸங்கையிலே அருளிச்செய்கிறார் (ஆஸ்திக்யேத்யாதி.) அதாவது - நோன்பாகிற அங்கிஸ்தாயினான க்ருஷ்ணன் தங்களுக்குச் சொல்லிற்றுச் செய்கிறவனே யாகிலும், நோன்புக்குவேண்டும் அங்கங்களையும் விடாதொழிகிறது-வேறேசில அதிகாரிகளுக்கு; அங்ஙனன்றிக்கே, தங்களைப்போலேநோன்பையே அநுஷ்டித்தார்களாகில் வ்ருஷ்டிரூபபலம் வித்தியாமல் போம்; அப்படியன்றிக்கே அவர்களுக்கும் பலம் வித்திக்கவேணுமென்னும் ஆஸ்திக்யாதி ஸயத்தாலே யென்கை: கோபவ்ருத்தரெல்லாரும் கூடி, "வர்ஷார்த்தமாகப் பெண்கள் நோன்பு நோற்கக்கடவர்கள், க்ருஷ்ணன் அதுக்கு நிர்வாஹகனுகக்கடவன்" என்று க்ருஷ்ணனையும் பார்த்துச் சொல்லி யிருக்கவும் அறியாதவனைப்போலே இங்கே ஏதென்று ப்ரஸ்நம்பண்ணுகை, வார்த்தையிட்டு வார்த்தை கொள்ளுகையே பரம ப்ரயோஜநமாகையாலே யென்று திருவுள்ளம்பற்றி, ப்ரஸ்நோத்தர பரம்பரையைக் காட்டுகிறார் (மார்கழி இத்யாதி.) தர்மஜ்ஞஸமயத்தை வேதாதிகளுக்கு மூர்தந்யவெடுக்கையாலும், "தத்தஷெவெதரெஜநாஹ" என்று - ஸிஷ்டாசாரமே கர்த்தவ்யமென்று தோற்றுகையாலும், அதுவே அதிஸயிதப்ரமாணமென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார். (ஸ்ருதிஸ்ம்ருதீத்யாதி.)

ப்ரஸ்நம் பண்ணுகிறவனைக் குறித்து எங்கள் வார்த்தையைக் காது கொண்டு கேட்டாயாகி லென்னக்கூடுமோ? என்ன; அருளிச்செய்கிறார்

'கேட்புதியாகில்' என்கிறது, அய்யபரதையாலே; 'அய்யபரதையென்? என்னில்?—பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களும் முன்னே நிற்கையாலே இவர்கள் முலையிலும் இடையிலும் கண்ணிலும் முகத்திலும் திரண்டு ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே யிருக்கையாலே தட்டி யெழுப்புகிறார்கள். இத்தால் - ஸ்வாபதேயத்தில், ஜ்ஞாந பக்தி வைராக்யங்களைச் சொல்லுகிறது. இவையிறே ஒதிகாரிக்கு அழகாகிறது. காண்கைக்கு ஹேதுவாகையாலே, "கண்" என்று - ஜ்ஞாநத்தைச்சொல்லுகிறது; போகோபகரணமாகையாலே, "முலை" என்று - பக்திபைச் சொல்லுகிறது; கார்ச்யத்தாலே, "இடை" என்று-வைராக்யத்தைச் சொல்லுகிறது. 'கார்ச்யத்தாலே வைராக்யம் தோற்றுமோ?' என்னில்,—கார்ச்யத்தாலே - †விரக்தியைச் சொல்லிற்றாய், அத்தால் - விஷயாந்தரஸ்பர்ஶ ராஹித்யத்தைச் சொல்லுகிறது, "ஶ்ரீராமஶ்ரீராமேதி" (கஅசூ) என்கிறபடியே 'உங்கள் வடிவு கண்ணுக்குப்போக்யமான வோபாதி, உங்கள் வார்த்தை செவிக்குப் போக்யமன்றோ? சொல்லுங்கோள்' என்ன; சொல்லுகிறார்கள்:—(ஞாலத்தை இத்யாதி)- - "ஸஹொஷாயாஸ்ரீராஷ்ணாம்ஹ்ருஷ்யாநிவ்ருஷ்ணாரயஶ்" (சுக) என்னுமளவன்றியே, ஜகத்தெல்லாம் வாழும்படி த்வநிக்கைக்கு இடமுடைத்

(கேட்புதியாகில் இத்யாதி.) ஆனைக்குப்பு - சதுரங்கம். "ஶ்ரீராமேதி" என்கிறபடியே சொல்லப்பட்ட மதுரமான தங்கள் ஆலாபத்தாலே எழுப்புகிறார்களென்று அன்வயித்து அர்த்தம் கண்டுகொள்வது.

"ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன, போய்ப்பாடையன" என்று அன்வயித்து, "ஞாலத்தையெல்லாம்" என்றவிடத்தில் அத்தும் ஐகாரமும் அவ்யயமாய், "ஞாலம்" என்று - ப்ரதிகூலரைச் சொல்லுகிறதாய், ப்ரதிகூலரெல்லாரும் நடுங்கும்படி த்வநிக்க இடமுடைத்தாயென்று ஸ்தார்த்தம் திருவுள்ளம்பற்றி வ்யாவர்த்ய பூர்வகம் பலித்த தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸகோஷ இத்யாதி.) ப்ரதிகூலர் நடுங்கும்போது அநுகூலமான ஜகத்தெல்லாம் வாழுகை அர்த்தவித்தாமென்று கருத்து. அன்றிக்கே, "ஞாலம்" என்றது - அநுகூலர்பரமாய், "நடுங்க" என்றது-இவற்றின் த்வநி செவிவழியே புகுந்து அம்ருதரஸம் போலே குளிர்ந்து வவ்வலிடப்பண்ணுகை யென்று தாத்பர்யம் அருளிச்செய்கிறரென்னவுமாம். சங்குகளே

† 'கிராதாரதையை' என்று பாடாந்தரம்.

தானவை. * பூங்கொள் திருமுகத்து மடித்தூதிய சங்கொலியிறே தாரகம். அப்படியே நாடெல்லாம் இத்த த்வநி கேட்டு வாழ வேணும். இவர்கள் தாங்களும்*வலம்புரிபோல் நின்று அதிரவேணு மென்றிறே சொல்லிற்று. (பாலன்ன) - பாலித் திரட்டினைத் போலே யிருக்கை. இப்படியிருப்பன பலசங்கு வேணும். (போய்ப் பாடு) - பேரிடமாயிருக்கை. இடமுண்டாகிலிறே த்வநி முழங்கி யிருப்பது. புகழ் என்றுமாம்; ருக்மிணிப்பிராட்டி போல்வாருக்கு உதவினனென்கிற புகழ்.

பின்னையோவென்ன,—(சாலப்பெரும்பறையே)-ஒரு மன்றிலே த்வநிக்கையன்றியே எங்குமொக்க த்வநிப்பதொரு பறைவேணும். ''யயளதகரயவரணாஷெந ஹொரிணாஹு உஹாவுஹெநே'' (ககூ0) என்னுமாபோலே. பின்னையோ வென்ன; - (பல்லாண்டிசைப்பாரே) - திருப்பல்லாண்டு பாடிக்கொண்டு போருவார் வேணும். பின்னையோ வென்ன;—(கோல விளக்கே) - அழகிய விளக்கு. அதாகிறது - மங்களதீபம். (கொடி) - திருக்கொடி யாட வேணும். (விதானம்) - மேல்கட்டி வேணும்.

என்று இவற்றை அபேக்ஷிக்க;—'சங்கும் பல கிடையாது, ஸ்ரீபாஞ்சஜந்யத்தைக் கொள்ளுங்கோள்' என்றான்; தன்னைப்

இங்ஙனே விசேஷித்ததற்கு உட்கருத்தைத் திருஷ்டாந்த பூர்வகம் விவரிக்கிறார் (பூங்கொள் இத்யாதி வாக்யத்வயத்தாலே.) நாடெல்லாம் வாழவேணு மென்னுமிவர்கள் பரமருத்தீபரதைக்கு ஸம்வாதம் காட்டுகிறார் (இவர்கள் இத்யாதி.) ''போய்ப்பாடு'' என்றதற்கு - இடமுடைத்தாகையைக் கீழ் ஒரு அர்த்தமாக அருளிச்செய்து, அர்த்தாந்தரம் அருளிச்செய்கிறார் (புக ழென்றுமாம் இத்யாதி.)

''சாலப் பெரும்பறை'' என்றதற்கு - மிகவும் பெரிதான வாத்ய மென்று சப்தார்த்தமாய், அத்தால் பலிதத்தை வ்யாவர்த்ய பூர்வகம் அருளிச்செய்கிறார் (ஒரு மன்றிலே இத்யாதி.) மன்று - பொதுச்சாவடி. ஸ்ரீபாஞ்சராத்ரக்ரியாபாதே ஷோடஸாத்யாயே ''ஜாயவஜ்ஞஜ்ஞவி தீளா தயஹொரீ தாலயதயதூரே'' இதி ஸ்ம்ருதம்வசநம் அத்ரஅநுஸந்தேயம்.

''ஆலினிலையாய்'' என்று ஸம்போதித்ததற்கு ப்ரஸக்திமூலக தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (என்று இவற்றை அபேக்ஷிக்க இத்யாதி.) ''ஆலினிலையாய்'' என்று - வடபெருங்கோயிலுடையானைக்குறித்து இவர்கள் அபே

போலே யிருப்பார் சிலருண்டாகிலிறே புறம்பு ஸ்ரீபாஞ்சஜந்யம் போலே யிருக்கும் சங்கு உண்டாவது. * பறைக்குப் பாரோர்க ளெல்லாம் மகிழப் பறைகறங்கக் குடக்கூத்தாடினபோது, திரு வரையிற்கட்டின பறையையும், திருப்பல்லாண்டு பாடுகைக்குப் பெரியாழ்வாரையும், விளக்குக்கு நப்பின்னைப் பிராட்டியையும், கொடிக்குப் பெரியதிருவடியையும், மேல்கட்டிக்கு அத்தவாளத் தையும் கொள்ளுங்கோ ளென்றான். 'விதாநத்துக்குத் திருவவத ரித்த அன்று பணத்தையிட்டுக் கவித்துக்கொண்டு போந்த திருவநந் தாழ்வானைக் கொடாதொழிவானென்?' என்னில்;—எல்லாரையும் போகச்சொன்னாலும் தன்னையொழிய ஓரடியிடமாட்டாதவனுகை யாலே, அத்தவாளத்தைக் கொடுத்தான்; * பெருமானையில்பீத கவண்ணவாடை கொண்டிறே வாட்டந்தணியச் சொல்லிற்று. 'ஓ ரொன்று போராது, இப்படியிருப்பனபலவேணும்' என்ன;-'இல்லா தத்தைத் தேடப்போமோ?' என்ன; - 'உனக்கு அரியதுஉண்டோ?' என்ன;—'எனக்கு எளியதா யிருந்ததோ?' என்ன;—(ஆலினிலை யாய்) - சிறியதொருவடிவைக்கொண்டு ஸர்வலோகத்தையும் சிறு வயிற்றிலேவைத்துப் பவனுயிருப்பதொரு ஆலந்தளிரிலே கண்வளர் ந்த உனக்கு முடியாதது உண்டோ? லோகத்தில் இல்லாததும் எங்க ளுக்காக உண்டாக்கலல்லே யென்று கருத்து. (அருள்) - வேண்டா

கூறித்தபோது க்ருஷ்ணவதாரத்தில் பறையைக்கொள்ளுங்களென்றும், நப் பின்னையைக் கொள்ளுங்களென்றும் சொன்னது, நாய்ச்சியாருடைய பர்வ நாப்ரகர்ஷத்தாலே அதீதகாலத்திலுள்ளதும் வார்த்தமாநகாலத்தோடு ஒத்துத் தோற்றுகையாலே சேரு மென்று கண்டுகொள்வது. 'ஓரடியிடமாட் டாதவன்' என்றது - அவதாரத்திலுமுட்பட, ''நவஸீதாசயாஹீ நா நயாஹவிராவவ'' என்றும், ''சஹாம்ஸ்ருங்காரிஷ்ணாஶி ஜாஶ்ர தவ்வ தஶ்ரதி'' என்றும் சொல்லுகையாலே - ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் தன்னைப் பிரியமாட்டாதவ னென்கை. அத்யந்தம் இஷ்டமாகையாலே கொடுத்தானென்று பரிஹாராந்தரம் அருளிச்செய்கிறார் (பெருமான் இத்யாதி.) ''சங்கங்கள்'' என்று பஹுவசநமிருக்கையாலே, ''பறை'' இத்யாதியேகவசநம் ஸமஷ்டிவாசக என்று திருவுள்ளம் பற்றி அருளிச்செய்கிறார் (ஒரொன்று இத்யாதி.) (உக)

தொழியில், செய்யலாவதில்லை, ஸக்தியில்லாமையில்லை; இத்தலை யில் பேற்றுக்கு எல்லாம் ஹேது அவன்ப்ரஸாத மென்கை.

"மாலே மணிவண்ணா" என்கிற இத்தால் - "ஹரி" (ககக) என்கிற இடத்தில் ஸௌலப்யத்தைச் சொல்லிற்று; 'ஆலினிலை யாய்' என்கிறவிஸேஷணத்தால் - "ஸுஹரி" (ககக) என்கிற இடத் தில் ஸஹாயாந்தரநிரபேக்ஷமான உபாயவேஷத்தைச் சொல்லிற்று; இப்பாட்டிற் சொல்லுகிறது - "நிரஸ்தஸமஸ்தபரஸஹாயஸ்ய ஸ்வைதி" (ககஉ) என்கிற ஸ்ரூத்யர்த்தம். (உசு)

ஸ்வாபதேஸ வ்யாக்யானம்.

அ.—இருபத்தாறும்பாட்டு. (மாலே இத்யாதி.) இப்பாட்டில், பகவத்ஸம்ஸ்லேஷத்துக்கு வேண்டும் உபகரணங்களே வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

வ்யா.—(மாலே மணிவண்ணா)-ஸர்வாதிகனுய் ஸர்வஸுலபனு னவனே யென்னுதல்; ஆஸ்ரிதவ்யாமோஹமே ஸ்வரூபமாய் அதி மநோஹரமான விக்ரஹத்தை யுடையவனே யென்னுதல். இப்படி ஸம்போதித்தவாறே,'நீங்கள் வந்த கார்யமென்?' என்ன,—(மார்கழி நீராடுவான்) - மார்கழி மாஸத்தில் நோன்புக்கு அங்கமாகக் குளிக்கை. இந்நோன்புதானே காம்யார்த்திகளுக்கு ஸாதநமாயும், நிஷ்காமருக்கு நித்யமாயும், ப்ரபந்நாதிகாரிகளுக்குப் பகவத்கைங் கர்யமாயும் இருக்கும். ஆகையாலே, ப்ரபந்நாதிகாரிகளுக்குச் சொல் லுகிற கர்மத்யாகம் - ஸாஸ்த்ரோக்தமான ஆகாரத்தாலே அநு ஷ்டியா தொழிகை யொழியக் கேவலம் அநநுஷ்டாநரூபத்யாக மன் றென்றதாய்த்து.

'அதில் ப்ரமாண மென்?' என்ன;-(மேலையார் செய்வனகள்) ப்ரமாணங்களில் தலையான ஸிஷ்டாசார மென்ன;

'அதுக்கு வேண்டுவதென்?' என்ன;—'பராக்கில்லாமல் கேட் டாயாகில் சொல்லுகிறேம்' என்ன; 'ஆகில் இதுவும் உங்கள் பேச் சன்றே? கேட்கிறேன், சொல்லுங்கோள்' என்ன; சொல்லுகிறார்கள்:- (ஞாலமித்யாதியால்.)-பூமிப்பரப்பிலுள்ள அஹங்காரி சேதநரடைய டுங்கும்படி த்வங்க்குமதாய், அதுக்குத் தக்க குடைகையை யுடைத் தாய் அதிபோக்யமாய் அதிபரிஸுத்தமாய் உன் திருக்கையில்

ஸ்ரீபாஞ்சஜந்யம்போலே யிருக்கிற பலசங்கங்கள் வேணும். இத்தால்-அகங்யார்ஹஸேஷத்வஜ்ஞாநம் வேணு மென்கிறது. ஸங்கத்வனி ஓங்காரமென்று ஜகத்திலே ப்ரஸித்தமா யிருக்கையாலே ஓங்கார ஸார்த்தம் அகங்யார்ஹஸேஷத்வ மாகையாலே, லக்ஷணபாஸேஷத்வ ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது.

(சாலப் பெரும்பறையே) - மிகவும் த்வரிக்கிற மத்யத்திலே யிருக்கிற பறையென்கையாலே - பகவதகங்யார்ஹஸேஷத்வ விரோதி யான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தையும், ஸேஷத்வஸிஹ்நமான கைங்கர்யத்தில் ஸ்வாதீநகர்த்ருத்வ போக்த்ருத்வங்களையும் நிவர்த்திப்பிக்கு மதாய், மத்யேயிருக்கிற நமஸ்ஸப்தார்த்தமான பாரதந்த்ர்யஜ்ஞாநமும் வேணுமென்னுமிடம்சொல்லுகிறது. (பல்லாண்டிசைப்பாரே) - ஸத்ஸஹவாஸம் வேணும்.

(கோல விளக்கே) - பகவதகங்யார்ஹஸேஷத்வத்தை அவனுக்கு அத்யந்தம்மநோஹரமாக்குகிற பாகவதஸேஷத்வஜ்ஞாநமும் வேணும். (கொடியே) - தீழ்ச்சொன்ன ஸேஷத்வ லக்ஷணமான கைங்கர்யமும் வேணும். (விதாநமே) - அக்கைங்கர்யத்தில் போக்த்ருத்வ நிவ்ருத்தியும் வேணு மென்ன;

'இல்லாதத்தை யுண்டாக்கலாமோ?' என்ன,-(ஆலினிலையாய்)-முன்பு இல்லாதத்தை யுண்டாக்கினவனல்லையோ? (அருள்)-க்ருபை யுண்டாகில் செய்யத்தட்டில்லை. (உசு)

அ.—இருபத்தேழாம்பாட்டு. நோற்றல், அவன்பக்கல் பெறக் கடவ பேறு சொல்லுகிறார்கள்.

மூ.—கூடாரைவெல்லுஞ்சீர்க்கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறுசம்மானம்
நாடுபுகழும்பரிசினல்லங்ருகச்
சூடகமேதோள்வளையே தோடேசெவிப்பூவே
பாடகமேயென்றனைய பல்கலனும்யாமணிவோம்
ஆடையுடுப்போ மதன்பின்னேபாற்சோறு
மூடநெய்பெய்து முழங்கையழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்.

இருபத்தேழாம்பாட்டு, (கூடாரை இத்யாதி.) எம்பெருமா னுடைய ஸம்ஸ்லேஷத்துக்காகத் தங்களுக்கு வேண்டும் பூஷணாதிகளெல்லாம் உத்தேஸ்யமாகத்தோற்றுமென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (நோற்றல் இத்யாதி.) நோற்றல் - நோன்பென்று வ்யாஜித்தால்.

உங்அ திருப்பாவை—இருபத்தேழாம்பாட்டு.

பதவுரை.—கூடாரை - தன்னை ஆஸ்ரயியாதவர்களை, வெல்லும்-ஜயிக்கும், சீர் - குணத்தையுடைய, கோவிந்தா - கோவிந்தனென்னும் திருநாமத்தையுடையவனே! உன்தன்னை-(கோபீஜநவல்லபனை)உன்னை,பாடி-(ப்ரீதிக்குப் போக்குவிட்டுப்) பாடி, பறைகொண்டு - (ப்ரார்ப்யத்தைப்) பெற்று, யாம் பெறு - நாங்கள் பெறும்படியான, சம்மானம்—,—நாடு புகழும் பரிசினால் - நாட்டார் புகழும்படிக்கு ஈடாக,—சூடகம் - (கையிலணியும் ஆபரணமான) முன்கைச்சரியும், தோள்வளை - தோளுக்கிடும் ஆபரணமான பாஹுவலயமும், தோடு - (காதுக்கிடும் ஆபரணமான) தோடும், செவிப்பூ-கர்ணப்பூவும், பாடகம் - (காலுக்கிடும் ஆபரணமான) பாடகமும், என்று அனைய - என்றுற்போலே சொல்லப்பட்ட, பல் கலனும் - பலவகையான ஆபரணங்களும், (நீயும் நம்பின்னைப்பிராட்டியுமாக இருந்து பூட்ட), யாம் - நாங்கள், நன்ருக அணிவோம்-நன்ருகத் தரிப்போம்; ஆடை உடுப்போம்-திருப்பரியட்டங்களை (நீ உடுத்த) உடுப்போம்; அதன்பின்னை - அதற்குப் பின்பு, பால் சோறுமூட-பாற்சோருனது மூடும்படி, நெய் பெய்து-நெய் பரிமாறி, முழங்கை வழி வார - முழங்கையால் வழியும்படியாக, (பிரிந்துபட்ட வ்யஸனமெல்லாம் தீரும்படி), கூடியிருந்து - (நீயும் நாங்களுமாகக்) கூடியிருந்து, குளிர்ந்து - ஸுகித்து இருப்போம் என்ற இதுவே என்கிறார்கள்.

வ்யா.—(கூடாரை வெல்லும்)-ஆந்தனையும் பார்த்தால், "நமஜெயே" (ககூஅ) என்பாரை வெல்லுமித்தனை. அவர்களை வெல்லுமாபோலே, கூடினார்க்குத் தான் தோற்கு மித்தனை. (சீர்) - எல்லாரையும் வெல்லுவது குணத்தாலே. "அவாஉவாவஞஉஒஎவீரஉ" (ககூக) என்று - விற்பிடித்த படியைக் காட்டி விரோதிகளைத் தோற்பிக்கும்; அதுகூலரை அழகாலும் நீர்மையாலும் தோற்பிக்கும்; ஸர்வஜ்ஞரை "எத்திறம்!" என்னப் பண்ணும் குணமிறே. அம்புவாய் மருந்தூட்

கூடாரைவெல்லுமதான, சீரை-கல்யாணகுணத்தை யுடையவனென்று ஸப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஆந்தனையும் இத்யாதி.) "கூடாரைவெல்லும்" என்னுமத்தால் - கூடுமவர்க்குத் தோற்குமென்று பலித்த தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (அவர்களை இத்யாதி.) 'தோற்குமித்தனை' என்றது - ஸீலாதிகுணங்களாலே அதுகூலரை வென்றுதான் தோற்றிருக்கு மென்றபடி. கூடாதாரை ஸௌர்யாதிகளாலும், கூடினாரை ஸீலாதிகளாலும் வெல்லும் ப்ரகாரத்தை ப்ரதீக க்ரஹண பூர்வகம் உபபாதிக்கிறார் (எல்லாரையும் இத்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே.) 'அம்பாலே தோற்பிக்கையும் குணத்தாலே தோற்பிக்கையும் துல்யமாமோ?' என்ன; அருளிச்செய்கிறார்(அழ்புவாய்இத்யாதி.) தாஹார்த்தஜனவன்தீர்த்த பாரம் பண்ணும்போது ஸாத்மிக்க ஸாத்மிக்கப் பாரம் பண்ணுதே ஆர்த்தி

டித்தீர்க்கலாம்; நீர் கொன்றுற்போலே இதுக்குப் பரிஹாரமில்லை. (கோவிந்தா) - கூடுவோமல்லோ மென்னும் அபிஸந்தியில்லாதமாத்ரத்திலே ரக்ஷித்தபடி.

(உன்தன்னைப்பாடி)-"ஹிரண்யாய நமஃ" என்கை தவிர்ந்து, வகுத்த உன்னுடைய பேரை ஸ்வயம்ப்ரயோஜநமாகச் சொல்லப் பெறுவதே! என்கை. கோபீஜந வல்லபனை உன்னைப் பாடுகையே எங்களுக்கு ப்ரயோஜநம் போரு மென்னவுமாம். (பறைகொண்டு)-ப்ராப்யத்திலே ப்ராபக வ்யவஹாரம். ஊருக்கு "பறை" என்கிறது; தங்களுக்கு ப்ராப்யம். (யாம்பெறு சம்மானம்) - தோளில் மாலையை வாங்கி யிடுகை இவர்க்குப் பெறுப்பேறென்கை. "வதூ ஸஹாநிதாஹீ தா" (கசகூ)என்று-"பெருமாள் தோளில் மாலையை வாங்கி யிட்டார்" என்று ஆழ்வான் பணிக்கும்; பட்டரும் பணிக்கும். அநாதிகாலம் எல்லாராலும் பட்ட பரிபவம் மறக்கும் படி கொண்டாடுகை.

(நாடு இத்யாதி) - ஒருவன் தொடுக்கும்படியே! சிலர் பெறும் படியே! என்று நாட்டார் கொண்டாடவேணும். (நன்முக) -

---

யாலே அதிகமாகப் பாநம் பண்ண அத்தாலே பாதைவந்தால் அதுக்கும், ஈஸ்வரனுடைய தாரகமான குணங்களே அபிநிவேஸத்தாலே யநுபவிக்கையால் வந்த ஈடுபாட்டுக்கும் பரிஹாரமில்லை யென்று கருத்து. * கோபத்தாலே ஹிதாஹிதஜ்ஞாநமில்லாமை தோற்றுகையால் அதுக்குத்தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கூடுவோமல்லோம் இத்யாதி.)

"உன்தன்னை" என்ற விடத்தில், "தன்னை" என்றத்தாலே தோற்றின தாழைதன்மை வகுத்தமேநிபாதை யென்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஹிரண்யாயேத்யாதி.) "கோவிந்தா" என்றபதத்தைக் கடாக்ஷித்து, "உன் தன்னை" என்றதுக்கு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கோபீஜநேத்யாதி.) ப்ராப்யத்திலே - தங்களுக்கு உத்தேஸ்யமான கைங்கர்யத்திலே. 'ப்ராபக வ்யவஹாரம்' என்றது-நோன்புக்கு அங்கமாகையால் ப்ராபகவாசகமான "பறை" என்கிற ஸப்தப்ரயோகமென்கை. இதுக்கு மேற்படத் தங்களுக்குப் பேறில்லாமையால் திருத்தோள்மாலை யிடுகையே ஸம்மாநமென்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (தோளில் இத்யாதி வாக்யத்வயத்தாலே.) 'சம்மாநம்' என்றது - கொண்டாடுகையாய், அர்த்தாந்தரம் அருளிச்செய்கிறார்(அநாதித்யாதி.)

நாடுபுகழும் பரிசினால் - நாட்டார் கொண்டாடும் ப்ரகாரத்தாலே யென்று ஸப்தார்த்தமாய், தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஒருவன் இத்

"ஹரெஹிவஸுலமெஹாரம் யஸ்ய த-ஷ்டாzவஹிஹாயிநி" (ககூநி) என்று - இந்தான் வரக்காட்டின ஹாரத்தைப் பெருமாளும் பிராட்டியும் கூடவிருந்துதிருவடிக்குப் பூட்டினதற்போலே பூண வேணும். "தம்வ்ஹாயுக்ரெணாயுஜ்ரஹி" (ககூசு) என்றும் சிலரை இட்டு ஒப்பிக்கை யன்றிக்கே, தானும் பிராட்டியுங்கூட இருந்து ஒப்பித்த தன்னேற்றம். ஆபரணத்தைப் பூண்டு அவன் வரவு பார்த்திராதொழிகை என்றுமாம்.

(சூடகமே) - ப்ரதமத்திலே ஸ்பர்ஶிக்கும் கைக்கிடும் ஆபரணம் பரமப்ரணயியாகையாலே தன் தலையிலேவைத்துக்கொள்ளும் கை. "அடிச்சியோந்தலைமிசை நீபணியாய்" என்று, இவர்களுக்கு அவன் சொல்லுமாபோலே சொல்லி, மார்பிலும் தலையிலும் வைத்துக்கொள்ளும் கைக்கு இடும் சூடகம். (தோள்வளை) - அந்தஸ்பர்ஶத்தாலே அணைக்கவேண்டும் தோளுக்கு இடும் ஆபரணம். (தோடே) - "பொற்றோடு பெய்து" என்று - பண்டே தோடிட்டாலும் அவனிட்டாற்போலே இராதிறே. (செவிப்பூவே) - "ஹ்ரியாவ தம்ஹ" (ககூஎ) இத்யாதியிற் சொல்லுகிறபடியே அணைத்த திருக்கையிலே உறுத்தும் ஆபரணங்கள்போலன்றிக்கே, அணைத்த அநந்தரம் ஆக்ராணத்துக்கு விஷயமான இடம். (பாடகம்) - அணைத்தால் தோற்றுப் பிடிக்கும் காலுக்கு இடும் ஆபரணம். (என்று அனைய பல்கலன்) - பருப்பருத்தன சிலசொன்னேமித்தனை; நீ அறியுமவையெல்லா மென்கை. * பலபலவே யாபரணமிறே. (யாம் அணிவோம்) - வ்யதிரேகத்தில் "மலரிட்டு நாமுடியோம்" என்கிற

யாதி.) நன்மையாவது - க்ருஷ்ணனும்கப்பின்னேயும் கூடஇருந்து பூட்டுகையென்று விவக்ஷித்து, த்ருஷ்டாந்தபூர்வகம்விவரிக்கிறார் (ப்ரதேஹீத்யாதி.) நன்மையாவது - க்ருஷ்ணன் ஸந்நிதியிலே தானே பூண்டிடுகையென்று விவக்ஷித்து வ்யாவர்த்யபூர்வகம் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ஆபரணத்தை இத்யாதி.)

"சூடகம்" என்றது - முன்கைச்சரியாய், அத்தைத் தரிக்கவேணுமென்றதுக்கு ஹேது அருளிச்செய்கிறார் (அடிச்சியோம்இத்யாதி.) 'அணைத்திருக்கையிலே' என்றது - அணைத்து உபதாநமாகக்கொடுத்த திருக்கையிலே யென்றபடி. "பல்கலனும் தாழவேணும்" என்ன வேண்டிருக்க, "அணிவோம்". என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (வ்யதிரேகத்தில்

வர்கள் "பூண்போம்" என்கிறார்கள். அவனுக்கு இவர்களதுமதி யைப் பண்ணுகையே அமையுமென்கை.

(ஆடை யுடுப்போம்) - 'பண்டு உடார்களோ?' என்னில்;— அவனுடித்து உடாதது உடையன்றென்றிறே இருப்பது. அவன் திருப்பரியட்டம் இவர்க ளரையிலே யாம்படி கூறை மாறவேணு மென்றுமாம். கோன்பை முடிக்கையாலே கல்ல பரியட்டம் உடுக்க வென்றுமாம். "உடித்துக் களைந்த" என்னுமவர்களிறே இவர்கள். ஸ்வேதகந்த யுக்தமாய் அவனுடித்து முகிந்த ஆடை என்னவுமாம். (அதன் பின்னே இத்யாதி.) - அதுக்குமேலே பால்சோறு மூடும்படியாக நெய் பெய்து. இத்தால் - பகவத்ஸம்பந்த முள்ள திருவாய்ப்பாடியில் ஸம்ருத்தியெல்லாம் ப்ரியமா யிருக்கிறபடி. (முழங்கை வழிவார) - நம்பி திருவழுதி வளநாடு தாஸர் "நெய் படாதோ?" என்ன; "க்ருஷ்ணஸங்கியாலே தீர்ப்தைகளா யிருக் கிறவர்களுக்குச் சோறு வாயில்தொங்கிலன்றே நெய்வாயில்தொங்கு வது?" என்று பட்டர் அருளிச்செய்தார். வ்யதிரேகத்தில் "நெய் யுண்ணும் பாலுண்ணும்" என்று சொன்னவர்கள் இன்று ஆசைப்படுகிறார்கள். (கூடியிருந்து) - பிரிந்துபட்ட க்லேஸம் தீரக் கூடித் தொட்டுக்கொண்டிருக்கையே ப்ரயோஜநம்; புஜிக்கை ப்ரயோ ஜநமன்று. (குளிர்ந்து) - பிரிந்தகமர்பிளைந்த நெஞ்சுகள் குளிரும்படி. "நம்பெருமாள் திருநாள்" என்று ஒருபேரையிட்டு ஸ்ரீ வைஷ்ண வர்களைத் திரட்டிக்காணுமாபோலே, "ஸுஹ்ருந்நி - ஸுஹ்ருந்நாத:" (ககுஅ) என்று ஒருவர்க்கொருவர் போக்யமிறே. "ஹொரஹுரு தெ

இத்யாதி வாக்யத்வயத்தாலே.) அதுமதியைப் பண்ணுகையே அமையும் அவன் கொடுக்கைக் கென்றுகருத்து.

'என்னுமவர்களிறே' என்ற அந்தரம் "ஆகையாலே" என்ற சேஷம். 'நெய்படாதோ வென்ன' என்றது - முழங்கையில்தானே வழிகையித்தனை போக்கி, வாயில் புகாதோவென்ன வென்றபடி. க்ருஷ்ணனேடே கூடியிருக் கையே ப்ரயோஜந மென்னு மதுக்கு, இவர்களோடே கூடுகை அவனுக்கு ஸ்வயம்ப்ரயோஜநமானதுபோலே இவர்களுக்கும் அவனோடு கூடுகை பரம ப்ரயோஜநமென்னும் அர்த்தத்தை த்ருஷ்டார்த்தமுகேந அருளிச்செய்கிறார் (நம்பெருமாள் இத்யாதி.) இவ்வர்த்தத்துக்கு ஸம்வாதம் அருளிச்செய்கிறார் (அஹமர்த்தம் இத்யாதி.) 'அஹமர்த்தம்' என்றது - ப்ரஹ்மத்துக்குத் தான் போக்ய மென்றபடி. அஹம்அந்நாத - நான் ப்ரஹ்மமாகிற போக்யத்தைப் புஜிக்கிறவனென்று முக்தனுடைய அநுஸந்தாநம் இருக்கிறபடி. இப்பாட் டில் க்ருஷ்ணனேடே கூறை சோறு முதலான இஷ்டங்களைப்புஜிக்கையைச்

ஸ்வாநுகாரேநஸஹஸ்வஹ்ருணாவிவஸ்யதா'' (ககூ) என்கிற ஸ்ருத்தியர்த்தம் இப்பாட்டிற் சொல்லுகிறது. (உஎ)

ஸ்வாபதேஸ வ்யாக்யாநம்.

அ.—இருபத்தேழாம்பாட்டு. (கூடாரை இத்யாதி.) இப்பாட்டில், நோற்றல், அவன்பக்கல் பெறுமவற்றைச் சொல்லுகிறார்கள்.

வ்யா.—(கூடாரை வெல்லுஞ் சீர்)-கரணகளேபரப்ரதாநம்; முதலாக ஸாங்கஸாஸ்த்ரப்ரதாநம் பண்ணின இடத்திலும்''நஹ்யேழு'' என்றிருப்பாரைத் தன்னுடைய ஸௌர்யாதிகுணங்களாலும் ஸீலாதிகுணங்களாலும் வெல்லுமித்தனை. விற்பிடியைக் காட்டி ராவணனை ஜயித்தான்;இது ப்ரதமயுத்தத்திலே''ஸஹ்ருத்ய ராக்ஷஸாந்''என்று இவனும் அதற்கு எதிர்பார்த்துப் போனவன், தோலாமை இல்லையிறே. ஆனல், மறுபடியும் யுத்தமுண்டானபடி யெங்ஙனே யென்னில்? - பெருமாளுடைய நிரதிசயஸௌர்யத்தை ப்ரகாஸிப்பிக்கைக்காகமறுபடியும்யுத்தம்பண்ணினனித்தனை.''ஸகிதாஸ்வவ்யாதஸீரஸ்வ ராஜநீயஸ்வகுலெஜ'' ''வ்யவிகுலெஜ ராஜநீயஸ்வ'' என்னக்கடவதிறே என்று நம்முடைய ஆசார்யர் அருளிச்செய்வர். தன்னுடைய வடிவழகைக் காட்டிக் கோபிமார்களை ஜயித்தான்; ஸ்வரூப ரூப குண விபூதிகளாலே ஸர்வஸ்மாத்பரனை தன்னுடைய வைலக்ஷண்யத்தைக் காட்டி ஆழ்வார்களை ஜயித்தான்; இவையொன்றிலும் ஈடுபடாத நம்போல்வாரை, ஆழ்வார் ஸம்பந்தத்தை வ்யாஜீகரித்து ஜயிக்குமித்தனை. (கோவிந்தா) - ஸர்வஸ்மாத்பரனாய் ஸர்வஸ்மாத்பரனை உன்னை த்வதநுபவ ஜநித ப்ரீதிக்குப் போக்கு

சொல்லுகையாலே இதற்கு ஸம்வாதம் அருளிச்செய்கிறார் (ஸோஸ்நுதேத் யாதி.) 'காமாந்' என்றது - இஷ்டங்களை யென்றபடி.

'கூடாரை' இத்யாதி, பாடிப்பறைகொண்டு யாம் ஸம்மானம் பெறக்கடவோம்; நாடுபுகழும் இத்யாதி, யாம் அணிவோம்; ஆடையுடுப்போம் அதன்பின்னே நெய் சோறுமூடப் பெய்து முழங்கைவழிவாரப் பாற்சோறு உண்ணக்கடவோம்; இப்படி உன்னோடு கூடியிருக்கக் கடவோமென்று அர்த்தம். ''சூடகம்'' இத்யாதியில் ஏகாரம் ஸமுச்சயம். (உஎ)

வீடாகப் பாடி. (பறை கொண்டு)-புருஷார்த்தத்தை லபித்து. (யாம் பெறுசம்மானம் நாடு புகழும் பரிசினால் நன்றாக)-நாடு ஸ்வாபிப்ராய மாகக் கொண்டாடும் ப்ரகாரத்தாலே உன்பக்கல் கைபார்த்திருக் கும் நாங்கள் லபிக்கிற பஹுமானம். உன் பக்கல் நன்றாக யாம் பெறு சம்மான மென்றுமாம். (சூடகமே) - காப்பே. (தோள் வளையே) - திருவிலச்சினையே. (தோடே) - திருமந்த்ரமே. (செ விப்பூவே) - த்வயமே. (பாடகமே) - சரமஸ்லோகமே. இவை ஸ்வ ரூபஜ்ஞனுக்கு முமுக்ஷுவான அதிகாரிக்கு அவஸ்யாபேக்ஷி தங்களாய் பகவத்ஸம்பந்தத்யோதகங்களா யிருப்பன. இதில் தோடு, மண்ட லாகாரமாய் மந்த்ரஸ்வரூப விவரணியான ப்ரணவாகாரத்துக்கு த்யோதகமா யிருக்கையாலே - திருமந்த்ரத்தைச் சொல்லுகிறது. (செவிப்பூ) - ஸ்வயம் போகரூபமாகையாலே, போகப்ரதாகமான த்வயத்தைச் சொல்லுகிறது. (பாடகம்) - பாடகம் பத்தரூபமா கையாலே, உபாயாந்தர நிவ்ருத்தி பரமான சரமஸ்லோகத்தைச் சொல்லுகிறது. இம்மூன்று ரஹஸ்யத்தாலும் - ஜ்ஞாநபக்திவைராக் யங்களைச் சொல்லுகிறது. அது எங்ஙனே யென்னில்,—திருமந்த் ரம் - ஆத்மஸ்வரூப யாதாத்ம்யஜ்ஞாநபரமாகையாலும், த்வயம் - உத்தரகண்டத்திற் சொல்லுகிற கைங்கர்யத்துக்குப் பூர்வபாவியான பக்தி ப்ரதாநமாகையாலும், சரம ஸ்லோகம் - த்யாஜ்யாம்ஸத்தில் வைராக்ய ப்ரதாந மாகையாலும், ஜ்ஞாந பக்தி வைராக்யங்களைச் சொல்லுகிறது. (என்று அனைய)-என்று சொல்லப்படுகிற. (பல்கல னும்) - ஜ்ஞாந பக்தி வைராக்யங்கள் மூன்றும். ஒவ்ஒன்றே விஷய பேதத்தாலே அநேகமாக யிருக்குமிறே; ஆகையாலே, 'பல்கல னும்' என்கிறார்கள். (யாம் அணிவோம்) - உன்னோடே கூடாத அன்று இவையொன்றும் வேண்டாத நாம், இன்று அணியக்கட வோம். பகவத்ஸம்பந்தமின்றியிலே ஜ்ஞாநபக்திவைராக்யங்களுண் டாஞலும் அபாயமேயிறே பலிப்பது. பொளத்தனுக்கும் ஜ்ஞாநபக்தி வைராக்யங்க ளுண்டிறே.

(ஆடையுடுப்போம்) - ஸ்வரூபத்வஜ்ஞாநமாகிற வஸ்த்ரத்தை யுடுப்போம். (அதன் பின்னே) - அதுக்குமேலே. (பால்சோறு) - கைங்கர்யமானது. (மூடநெய்பெய்து) - மறையும்படி பாரதந்த்ர் யத்தை வெளியிட்டு. (கூடியிருந்து குளிர்ந்து)-போக்தாவான உன் னோடு போக்யரான நாம் ஸம்பந்தித்திருந்து விஸ்லேஷவ்யஸந மெல் லாம் தீரப்பெற்றேமும். இதுவன்றே நாம் உன்பக்கல் பெறும் ஸம்மாநம்.

(உள)

உசாவு திருப்பாவை.—இருபத்தெட்டாம்பாட்டு.

அ.—இருபத்தெட்டாம்பாட்டு. முதற்பாட்டில் "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று ஸங்கல்பஹேது சொன்ன ப்ராப்ய ப்ராபகங்களே, இந்த இரண்டு பாட்டாலே விவரிக்கிறது. அதில், இப்பாட்டிலே, 'காட்டார் இசைகைக்காக "நாரான்பு" என்று ஒரு வ்யாஜத்தையிட்டுப் புகுந்தோமித்தனை; எங்களுக்கு உத்தேச்யம் அதுவன்று, உன்திருவடிகளில் கைங்கர்யமே' என்று தங்களுக்கு உத்தேச்யமான புருஷார்த்த ஸித்திக்கு, தங்கள் ஆகிஞ்சந்யத்தை யும் ப்ராப்தியையும் முன்னிட்டு, 'நீயே உபாயமாகவேணும்' என்று அபேக்ஷித்து, இதுக்கு கூடாமணம் பண்ணிக்கொண்டு ப்ராப்ய ப்ரார்த்தநம் பண்ணித் தலைக்கட்டுகிறது. மேலிற்பாட்டிலே - ப்ரா ப்ய ப்ரார்த்தநம் பண்ணுகின்றதாகில், இங்குப் பண்ணுகிற தென் னென்னில்? - ப்ராபகம் ப்ராப்யஸாபேக்ஷம் ஆகையாலே சொல்லு கிறார்கள்.

மூ.—கறவைகள்பின்சென்று கானஞ்சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாதவாய்க்குலத்து உன்றன்னைப்
பிறவிபெறுந்தனைப்புண்ணியம்நாமுடையோம்
குறைவொன்றுமில்லாதகோவிந்தா வுன்றனை
நிறைவேல்நமக்கிங்கொழிக்கவொழியா
தறியாதபிள்ளைகளோமன்பினு லுன்றனைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவாநீதாராய்பறை யேலோரெம்பாவாய்.

இருபத்தெட்டாம் பாட்டு. (கறவைகள் இத்யாதி.) முதல் பாட்டில் "நாராயணனே" என்றதால் - ப்ராபகத்தையும், "பறை" என்றதால் - ப்ராப்யத்தையும் சொல்லிப்பிருக்க, "இறைவாநீதாராய்".என்று இப்பாட்டில் சொல்லுமனவில் பௌகருக்த்யமும், 'இற்றைப்பறைகொள்வா னன்றுகாண்' என்று - மேற்பாட்டிலே பறையைநிஷேதிக்கையால் அந்தப்பறை ப்ராப்ய மென்று சொல்லுமனவில் விரோதமும் ப்ரஸங்கிக்குமென்னும் ஸங்கையிலே அருளிச்செய்கிறார் (முதற்பாட்டில் இத்யாதி.) "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்றது - அபராதமாய், அதுக்கு கூடாமணத்தையும் தங்க ளாகிஞ்சந்யம் முதலான உபயுக்தார்த்தத்தையும் இப்பாட்டில் சொல்லுகை யால் இது விவரணமாய்த்து; மேலில் பாட்டில் அர்யாபதேசமான அர்த் தத்தை நிஷேதித்து, "பறை" என்றதில் முக்யார்த்தான அர்த்தத்தை விவ ரிக்கையால், அதுவும் விவரணமென்று கருத்து. விவரணரூபத்தை உபபாதிக்கிறார் (அதில் இத்யாதி.) "இற்றைப் பறைகொள்வானன்றுகாண்" இத்யாதியைக் கடாக்ஷித்து, இப்பாட்டில் "பறை" என்றதில் னர்த்தத்தை

